# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER. | Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு சித்திரைமாதம் 1-ந் திகதி சனிக்கிழமை — பிரிதசதம் 12 | 13-ம் இலக்கம்


# தமது திருவாக்கின்படியே உத்தானமானர்

**அருணோதயத்தின் அழகுபொழியும் பொற்சுடர் பூவுலகிற் கவிந்திருந்த இருட்பிழம்பை அகற்றிவிட்டது. உத்தானகாலத்தின் ஞானனந்தம் தபசுகாலத்தின் மனோவியாகுலத்தை மறைத்துவிட்டது. காருடையணிந்து சாம்பர்பூசி, ஒறுத்தல் உபவாசம்பூண்டிருந்த கிறிஸ்தவமக்கள், நாற்பதுநாள்களாய் 'அல்லேலூயா' பாடி ஆனந்திக்கப்போகின்றனர். ஏனெனில், மரித்தயேசு மரணத்தை வெற்றிகொண்டார்; உயிர்த்தெழுந்தார். ஒளிக்கும் இருளுக்கும், சாவுக்கும் வாழ்வுக்கும், அறத்திற்கும் மறத்திற்கும் அன்புக்கும், அலகைக்கும் நடந்த போரில் அருளின் வேந்தன் ஜெயங்கொண்டார், உத்தானமானர்.**

உலகவரலாற்றில் ஒரேயொரு கல்லறைக்குத்தான் கடினகாவல் வைக்கப்பட்டிருந்தது. கல்லறை வாயிலின்மேல் பாறையுருட்டி மூடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது. இந்தவோர் உயிரற்ற சடலத்துக்கே ஆயுதந்தாங்கிய போர்வீரர் காவல்புரிந்தார்கள். கல்லறைமீது தோன்றிய இந்த அவதானம் கடைசிநிமிட நேரத்தில் தோன்றியதன்று. "இந்தத் தேவாலயத்தை இடித்துப்போடுங்கள். மூன்றுநாளில் இதைமீண்டும் கட்டியெழுப்புவேன்" என்று யேசுபிரான், ஜெருசலேம் தேவாலயத்திற் கூறிய தீர்க்கதரிசனமே இத்தனை முஸ்திப்புக்களுக்கும் காரணமாயிருந்தது.

பெரிய சனிக்கிழமையன்று காலை யூதஅதிகாரிகள் பிலாத்துவின் சமுகத்தில் ஒன்றுகூடினர். 'இந்த ஏமாற்றுவித்தைக்காரன்' தான் உயிருடன் இருக்கும்போதே "நான் மூன்றுநாளில் உயிர்ப்பேன்" என்றுகூறியவாக்கு எங்கள் ஞாபகத்தில் இருக்கிறது. ஆகையால் மூன்றும்நாள் விடியும்வரை இவன் கல்லறையைக் காவல்புரியக் காவலர்களை ஏற்பாடு செய்யுங்கள்; இல்லையேல் இவன் சீடர்கள் ஒருவேளை தம் குருவின் உடலை எடுத்துச் செல்லவும்கூடும்" என்று முறையிட்டார்கள்.

பிலாத்துவும், சம்மதித்தான். காவலும் பலமாயிருந்தது.



என்னவிந்தை இது! கிறிஸ்துவின் விரோதிகள் அவருடைய உத்தானத்தின்மீது கண்ணுயிருந்தார்கள்; உண்மையான சீடர்களோ அதைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை!

* * *

உதயத்தின் கோழிகூவியது' பொழுதுபுலரத் தொடங்கியது. அதோ! அழகேயுருவான பெண்மணியொருத்தி வருகிறுள், கவலை தோய்ந்தமுகம், கண்ணீருகுக்கும் நயனங்கள், சோகபிம்பமாகக் காட்சியளிக்கின்ருள். கையிலே வாசனைத்திரவியமிருக்கின்றது. அவள் எங்கு செல்கிருள்? உயிர்த்தெழுந்த இரட்சகரைக் காண்பதற்காகவா துடித்துச் செல்கின்ருள்? இல்லை. உயிரற்ற அவரது சடலத்தை பரிமள தைலம் பூசித்தோத்திரிப்பதற்காகவே போகிருள். கல்லறை திறந்து கிடக்கிறது. தேடிவந்த கர்த்தரைக் காணோம். கர்த்தர் உத்தானத்தைப்பற்றி அவள் கடுகளவும் சிந்திக்கவில்லை.

கல்லறையின் அருகில் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள் மரியமதலேனாள். "ஸ்திரீயே! ஏன் அழுகிருய்? என்று ஒருகுரல்கேட்டது. கவலையின் மிகுதியால் சம்மனசுகளைக்கண்டும் அவள் கலங்கிநிற்கவில்லை. "என் ஆண்டவரை அவர்கள் தூக்கிச் சென்றுவிட்டார்களே எங்கு வைத்திருக்கிருர்களோ தெரியவில்லை" என்று மரியமதலேனாள் விடை பகர்ந்தாள். அவள் திரும்பிநோக்கினாள். பின்னால் யேசுநின்ருர். அவள் உணர்ந்துகொள்ளவில்லை. அவரை, அரிமாத்தியாவூரானுய சூசையப்பரின் தோட்டக்காரன் என்று நினைத்தாள்.

யேசு, 'மரியே' என்று அவளைக் கூப்பிட்டார். இடிபோலக்கேட்ட குரலொலியால் மதலேனாள் நடுங்கினாள். அவருடைய கைகால்களில் ஆணிக்காயத்தழும்புகளைக் கண்ணுற்ருள். "குருவே!" என்று அலறினாள்.

மரியே! என்ற அந்த ஒருவார்த்தையில் மோட்ச இராச்சியமே நிறைந்து காணப்பட்டது. "குருவே" என்ற மதலேனாள் மொழியில் இவ்வுலகமுழுதும் நிறைந்திருந்தது.

* * *

அன்றுமாலை. சீடர்கள் ஒன்றுகூடிப் பகலில் நடந்த விடயங்களைப்பற்றி உரையாடிக்கொண்டிருந்தார்கள். திடீரென யேசுதேவன் அவர்கள் மத்தியில் தோன்றினார். "எதனால் நீங்கள் இம்மாதிரிக் கலவரப்படுகிறீர்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

---

மரணவேதனைப் படுவோருக்காகப்

## புதுப்பலன்

மரணவேதனைப் படுவோருக்காகத் திவ்வியபூசைப்பலியில் பங்குபற்றி மன்றாடுவோருக்குப் பரிசுத்த பாப்பரசர் 23-ம்அருளப்பர் ஒரு புதுப்பலன் அளித்துள்ளார். மனஸ்தாபத்தோடு மரணப்படுக்கையில் இருப்பவர்களுக்காகப் பூசைப்பலியில் பங்குபற்றி மன்றாடும் ஒவ்வொரு முறையும் பத்துவருட அபூரண பலனை இப்போது அடைந்து கொள்ளலாம். இவ்வாறு ஒரு மாதம் முழுவதும் பூசைப்பலியில் பங்கெடுத்து மன்றாடிவந்தால், வழமையான நிபந்தனைகளின் பிரகாரம், ஒரு பரிபூரணபலனையும் அடைந்து கொள்ளலாம்.

---

# 23-ம் அருளப்பர்

## திருச்சபையின் 261-ம் தலைவர்

எமது பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் திருச்சபையின் 262-ம் தலைவர் என்று கருதப்பட்டுவந்தார். ஆனால், நீண்ட கால ஆராய்ச்சியின்பயனாக அவர் திருச்சபையின் 261-ம்தலைவர் என்ற முடிவுக்குத் திருச்சபைச் சரித்திர ஆராய்ச்சியாளர் இப்போதுவந்துள்ளனர். இதற்குக் காரணம் 752-ம்ஆண்டு பங்குனி மாதம் 23-ம்திகதி பாப்பானவராகத் தெரிவுசெய்யப்பட்ட 2-ம் ஸ்ரீவின் மேற்றிராணியாராக இருக்கவில்லை; தெரிவுசெய்யப்பட்ட இரண்டாம்நாளே மேற்றிராணிப்பட்டம் பெருமல் காலமாகிவிட்டார். ஆகவே, அவரைத் திருச்சபையின் தலைவராகக் கருத முடியாது என்று இவ்வருடம் வெளியிடப்பட்ட பரிசுத்தஸ்தானத்தின் வருடாந்தநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும்செய்தி

## கொழும்பில் கத்தோலிக்க தகவல்நிலையம்

சில நாட்களுக்குமுன் கொழும்பு மாநகரில் கத்தோலிக்க தகவல்நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இது டாளி றோட் 214/1 இலக்கத்தை முகவரியாகக் கொண்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையைப்பற்றிப் பிறசமய மக்களிடையே நிலவிவரும் தப்பபிப்பிராயங்களை நீக்கிக் கத்தோலிக்கருக்கும் மற்ற மதத்தினருக்குமிடையில் நல்லெண்ணத்தையும் சிநேகமனப்பான்மையையும் வளர்ச்செய்வதே இப்புது நிறுவனத்தின் நோக்கமாகும். இது திறக்கப்பட்டு மூன்று தினங்களுக்குள் 150-க்கு அதிகமான பிறசமய நண்பர்கள் கத்தோலிக்க திருச்சபையைப்பற்றித் தகவல்கள்கோரியுள்ளனர் என்று தெரியவருகிறது. இதுஒருநல்ல அறிகுறிஎன்றே கூறவேண்டும்.

## அக்குவினஸ் சர்வகலாசாலைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

இம்மதி 7-ந் திகதி, அர்ச். அக்குவினுத் தோமையாரின் திருநாளன்று அக்குவினஸ் சர்வகலாசாலைக் கல்லூரியின் ஆறுவது பட்டமளிப்பு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இம்முறை பட்டம்பெற்றோரின் தாய்தந்தையரும் அழைக்கப்பெற்றுப் பெருந்திரளாக வந்து கூடியிருந்தனர்.

பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய கொழும்பு அதிமேற்றிராணியார் அதிவந். தோமாஸ் கூறே ஆண்டவர் அவர்கள் தமது பேருரையில் சர்வகலாசாலைக் கல்லூரியின் முன்னேற்றத்தைப் பாராட்டியபின், பட்டாதாரிகளின் பெற்றோர் பெருந்தொகையாகச் சமுகமளித்திருப்பதைச் சுட்டிக்காட்டி எவர் எதைக் கூறினாலும் கல்விவிடயத்தில் பெற்றோருக்கே முதல் பொறுப்புண்டென்பதை இது துலக்கமாகக் காட்டுகின்றது என்று குறிப்பிட்டார். சர்வகலாசாலைக் கல்லூரி அதிபாகிய அதிவண. பீற்றர்பிள்ளை, O. M. I. சுவாமியார் அவர்கள் தமது வருடாந்த அறிக்கையில் அக்குவீனஸ் சர்வகலாசாலைக் கல்லூரி கடந்த ஆறு வருடங்களில் கிரமமாக முன்னேறிக்கொண்டு வந்துள்ளதென்றும், 1960-ம் ஆண்டில் 40 பேர் பரீட்சையில் சித்தி அடைந்தனர் என்றும், ஆகவே இக்கல்லூரிமூலமாகப் பட்டம் பெற்றவர்களின் தொகை 125 ஆகியுள்ளது என்றும், இப்போது பட்டப் பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்துவோரின் தொகை 768 என்றும் குறிப்பிட்டார்.

வனத்துமூலையில் சர்வகலாசாலைக் கல்லூரிக்குச் சொந்தமாயிருந்த 16 ஏக்கர் காணியை அரசாங்கம் வலோற்காரமாய் எடுத்ததைக் குறிப்பிட்டுக் கௌரவ. பிரதமமந்திரி அவர்கள் இந்த அநியாயச் செயலை நீதியானமுறையில் தீர்த்துவைப்பார் என்று தாம் எதிர்பார்க்கிறதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கண்டியில் கத்தோலிக்க இளைஞர்மன்றம் அங்குரார்ப்பணம்

கண்டி, அர்ச். அந்தோனியார் ஆசனக்கோயிலில் அர்ச். டோமினிக் சாவியோவின் பாதுகாவலின்கீழ் ஒரு புதிய இளைஞர் மன்றம் நிறுவப்பட்டுள்ளது. இம்மன்றத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கண்டி மேற்றிராணியார் மகா வந்தனைக்குரிய லியோ நாணயக்கார, O.S.B. ஆண்டகை அவர்களும், பிரதம சுவாமியார் அதிவண. டி. டி. பாசன்பார்க், O.S.B. அவர்களும் கலந்துகொண்டனர். ஆசனக்கோயில் கட்டளைக்குரவாகிய வண. தியாவின் விக்ரமரட்ண, O. S. B. சுவாமியார் அவர்கள் புதிய இளைஞர் மன்றத்தின் நோக்கத்தைத் தெளிவாக எடுத்து விளக்கினர். அவர் கூறியதாவது: "கத்தோலிக்க இளைஞர் மத்தியில் ஒற்றுமையையும், சிநேகமனப்பான்மையையும் வளர்க்கவும் ஓய்வுநேரங்களை நன்கு பயன்படுத்த வசதிகள் அளிப்பதற்கும், இளைஞர்களைக் கத்தோலிக்க சேவையில் ஈடுபடும்படி உற்சாகப்படுத்தவும் இம்மன்றம் அதிக துணைபுரியும்." கூட்ட இறுதியில் புதிய மன்றத்தின் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

## மாத்தளை மரியாயின் பிரான்சீஸ்கன் சகோதரர்கள்

மேற்படி சந்நியாசக்கூட்டம் மாத்தளையில் ஸ்தாபிக்கப்பட்டுச் சிலஆண்டுகள் ஆகின்றன. இப்புதிய கூட்டத்தை ஒழுங்குபடுத்திப் பிரான்சீஸ்கன் வழியிலே உறுதிப்படுத்தினவர் அமெரிக்க நியுயோர்க் வாசியான பிரான்சீஸ்கன் சபைக்குரவர் வண. அகுஸ்தீன் போல் லறன்ஸ்க்கி, O.F.M. சுவாமிகளே.

1952-ம் ஆண்டில் மாத்தளைக்கு விஜயஞ்செய்து, கஷ்டநஷ்டங்களையும் பாராது அல்லும்பகலும் அயராதுழைத்து, காட்டையும்மேட்டையும் வெட்டி மட்டமாக்கி யூனியஸ்மாரும், நவசந்நியாசிகளும் தங்குவதற்கு இருப்பிடம் கட்டுவித்தார். 1954-ம் ஆண்டில் அமெரிக்காவுக்குப்போய் இரண்டுவருடங்களுக்குப்பின் 1956-ம் ஆண்டில் மறுபடியும் மாத்தளை திரும்பினர்.

சந்நியாசிகளின் சகல ஆத்துமசரீர விஷயங்களிலும் ஊக்கமெடுத்து எல்லாத்துறைகளிலும் அவர்களை உயர்த்த முயன்றார். கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு முதலியன தொடங்கினர். ஆனல், அத்தியாவசியமான தேவைகளுக்கு இவைகளின்மூலம் கிடைத்த பணம் சொற்பமே. இலங்கைமுழுதும் அவர் யாசகம் செய்தாரென்பது மிகையாகாது.

அவர் செய்துமுடித்த பெரும் காரியங்களில் விசேஷமானது ஒன்றுண்டு. சந்நியாசிகளுக்கு ஏற்றதோர் ஒழுங்குப்புத்தகத்தை அமைத்து, பாப்பரசரின் அங்கீகாரம் பெற்று, அதைப் பிரசுரித்து ஆளுக்கு ஒருபிரதி கொடுத்துள்ளார்.

சென்றமாத இறுதியிலே திரும்பவும் இவர் அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார். மீளவும் இவர் இங்குவந்து சேவை புரிவாரென்று எதிர்பார்க்கிறோம்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

# இருளில் ஒளி

1

— சா. பெ. —

ஒவ்வொரு ஞாயிறுவாரமும் எனது கத்தோலிக்க கணவர் எங்கள் வளர்ந்த குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு திவ்விய பூசைக்குச் செல்வார். அத்தருணங்களில் யான் சிறிய குழந்தைகளுடன் வீட்டில் தங்கியிருப்பேன். எனது சிறிய குழந்தைகளும் வளர்ந்தபின் ஆலயத்துக்குச் செல்லத் தொடங்கினர். ஞாயிறுவாரங்களில் அதிகாலை வேளையில் தனிமையில் விடப்பட்டேன்.

தனிமையைப்போக்கச் சஞ்சிகைகளின் உதவியை நாடினேன். எனது கணவர் பல சஞ்சிகைகளைவரவழைப்பது வழக்கம். இவற்றுள் எனக்குப் பிடித்தது கதலிக் டைஜஸ்ற் சஞ்சிகையே. அச்சஞ்சிகையில் கொலம்பசின் பரிமேலர் இயக்கம்பற்றிச் சுவையானதோர் கட்டுரை என்மனதைக் கவர்ந்தது. இவ்வீரர்கள் கத்தோலிக்கரல்லாதோருக்குக்கத்தோலிக்க திருச்சபையின் தத்துவங்களைத் தபால்மூலம் இலவசமாகப் போதிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். கத்தோலிக்க திருச்சபையின் தத்துவங்களையறிய விரும்பி இவ்வியக்கத்தினருக்கு மனுச் செய்துகொண்டேன்.

ஆரம்ப பாடங்களே பல உண்மைகளை அறிவுறுத்தின. தொடர்ந்து பல அரிய தத்துவங்களை அறிந்தேன். இருளில் வாழ்ந்த எனக்கு ஒளி எங்கிருக்கிறதென்பது புலனாகியது. எங்கள் கிராமத்திலிருந்த கத்தோலிக்க குரவரை நாடிச்சென்று என்விருப்பைத் தெரிவித்தேன். ஞானஸ்நானம் பெறுவதற்கான ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டதும் இச்சுபசெய்தியை எனது கணவருக்குக் கூறினேன். அளவில்லா ஆனந்தம்கொண்டார் அவர். கிறிஸ்மஸ் நன்னாளில் யான் புதுநன்மையைப் பெற்று மகிழ்ச்சியுற்றேன். அடுத்த வைகாசி மாதத்தில் எனது நான்கு குழந்தைகளுடன் யானும் உறுதிபூசுதல் எனும் தேவதிரவிய அனுமானத்தின்மூலம் இஸ்பிரீத்துசாந்துவானவரின் கொடைகளைப்பெற்றுக் கத்தோலிக்கத்தில் திடங்கொண்டேன்.

திருமதி எற்வேட் கொப்

குறிப்பு—: அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற தேசங்களில் கத்தோலிக்க உண்மைகளைக் கத்தோலிக்கர் அல்லாதோருக்கு இலவசமாகத் தபால்மூலம் போதிக்கும் கொலம்பசின் பரிமேலர் இயக்கம் போன்று, இலங்கையிலும் தற்போது ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க தகவல் நிலையம், டார்லி வீதி, கொழும்பு என்பது இவ்வியக்கத்தினரின் முகவரி. உங்கள் பிறசமய நண்பர்கள் கத்தோலிக்க மதம்பற்றி அறிய ஆசிப்பின் இம்முகவரியைத் தெரிவியுங்கள்.

# ஆசிரியருக்குக் கடிதம்

எல்லோர் இல்லங்களிலும் காவலன் நுழையவேண்டும்என்றும் தன்னுடைய மேற்றிராசனப் பத்திரிகை என்றமட்டில் ஆர்வமும், உற்சாகமும் கொண்டு தான் ஏழேஏழு கத்தோலிக்க குடும்பம் வாழ்ந்துவரும் இல்லங்களில் 10பிரதிகள்தோறும் வாரம் தவறாது விநியோகம்செய்து வருவதாகச் சகோதரி எ. இராயப்புஎழுதியுள்ள பகுதியை 2-3-61 காவலனில்வாசித்துப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இதே உற்சாகமும, ஊக்கமும்கொண்ட பெண்மணிகள் முன்வருகிறதை வரவேற்கிறேன். பத்திரிகை விநியோகம் செய்வதோடு கிறீஸ்துநாதரின் இராச்சியத்தைப் பரப்பவும், அதில் குருமாரோடு சேர்ந்து உழைக்கவும் தனக்குள் சபதம்செய்துகொள்ளவேண்டும். தங்களை அடுத்துள்ளவர்களுக்குக் கத்தோலிக்ககொள்கைகளை எடுத்துச்சொல்வதிலும், அறியாதவர்கள், குழந்தைகள் மத்தியில் ஞானஉபதேசத் தொண்டர்களாகப் பணியாற்றுவதிலும் பெருமைகொள்ளவேண்டும். பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதரும் இதை உண்மையான ஓர்உத்தம கத்தோலிக்க சேவையாகக் கருதிவந்தார். கத்தோலிக்க பத்திரிகைகளுடன் தொடர்புகொண்டோருக்கு அவர் அருளிய ஆசிகள்:

(1) தங்களுடைய உற்சாகத்தாலும், எழுதும்முறையாலும கத்தோலிக்க பத்திரிகையைக் கிறிஸ்துவஉண்மைகளைக் காப்பதற்கும், நாட்டுமக்களின் மனச்சாட்சியை ஞானமார்க்கத்தில் வளர்ப்பதற்கும் ஏற்றசாதனமாகச் செய்பவர்களை ஆசீர்வதிக்கிறோம்.

2. கத்தோலிக்க பத்திரிகைகளை இல்லறத்தார்மத்தியில் பரப்புவான் வேண்டி உழைப்போர் யாவரையும் ஆசீர்வதிக்கிறோம்.

3. கத்தோலிக்க பத்திரிகைகளை வாசிக்கும்படி எல்லோரையும், குறிப்பாக இளைஞர்களையும் தூண்டும் அனைவரையும் ஆசீர்வதிக்கிறோம்.

4. கத்தோலிக்க பிரசுரங்களை வாசிப்பதால் நேர்மையான கருத்துக்கள் உருக்கொண்டு தங்களது சமுதாயக் கடமைகளையும், கிறிஸ்துவகடமைகளையும் சரிவர நிறைவேற்றுபவர்களையும் ஆசீர்வதிக்கிறோம்.

5. தங்கள் விசேஷ திறமையினால் கத்தோலிக்க பத்திரிகைகளைத் தற்கால வளர்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்துபவர்களையும் ஆசீர்வதிக்கிறோம்.

ஆகையால், பத்திரிகை விநியோகம் இகழ்ச்சியென்று மனவெறுப்படையாமல் உற்சாகம் கரைபுரண்டோடும்படி பத்திரிகையை ஒவ்வொரு இல்லங்களிலும் கொண்டுவிநியோகம்செய்ய ஆடவர்களும், மாதரசிகளும் முன்வரவேண்டும்என்று வேண்டுகிறேன்.

ஏ. சி. சில்வெய்ரு,
கொழும்பு.

---

## மீட்கப்படாத நகைகளின் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், பெரிய தெருவில் அடைவுபிடித்துவரும் அருணசலம் சண்முகம் மகாதேவா அவர்களிடம் 1956-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 1-ம் திகதிதொடக்கம், 1958-ம் ஆண்டு மார்ச்மாதம் 31-ம் திகதிவரையும் அடைவுவைக்கப்பெற்று, குறித்தகால எல்லைக்குள் மீட்கப்படாத நகைகள் 1961-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அவரது அடைவுகடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும். இடாப்புத் தேவையானோர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்.

யாழ்ப்பாணம், 21-3-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## பிரதமருக்குப் பதில் கூறியுள்ளார்

"தமிழரசுக்கட்சியின் மொழிப் போராட்டம் இன்று தமிழ்ப்பேசும் மக்களின் சுயபோராட்டமாக மாறியுள்ளது சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டுவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி பிரதமர் கூறுவது எம்மால் ஏற்கமுடியாததொன்றாகும். இந்த அரசாங்கத்தை நம்பி அதன் அழைப்பை நாம் ஏற்கமுடியாதநிலையில் இருக்கிறோம். எமது சத்தியாக்கிரக இயக்கம் அரசாங்கத்திற்குப் போதிய முன்அறிக்கை கொடுத்தபின்னரே ஆரம்பிக்கப்பட்டது." "பேச்சுவார்த்தைக்கு இணங்கினால் எங்களுக்கு நீதி வழங்கப்படும் என்பதற்கு எதுவிதமான வாக்குறுதியும் பிரதமர் தமது பேச்சில் தெரிவிக்கவில்லை. இதுபோன்ற பேச்சுக்களை நாம் நம்பவும் தயாரில்லை. தமிழ்ப் பேசும் மக்களுக்கு நியாயம் வழங்கும் சட்டங்கள் தயாரிக்கப்படும்வரை சத்தியாக்கிரக இயக்கத்தில் எத்தகைய தளர்ச்சியும் ஏற்படாது." இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி. பிரதமரின் வானொலிப் பேச்சுக்குப் பதிலளித்துள்ளார்.

## பிரதமரின் வானொலிப் பிரசங்கம்

சென்ற சனிக்கிழமை 25-ந் திகதி பிரதமர் இலங்கை மக்களுக்கு வானொலிமூலம் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்: "மொழிச் சட்டத்தை அமுல்நடத்துவதின்மூலம் தமிழ்ப்பேசும் மக்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தால் அவைகளைப்பற்றி ஆலோசிக்கத் தயாராயிருக்கிறேன் என்று நான் முன்பு கூறியுள்ளேன்.

"சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டாலன்றித் தற்போதைய நிலைமையைத் தீர்த்துவைக்க எனது அரசாங்கத்தால் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தப்படமாட்டாது என்று மீண்டும் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

"அரசாங்கம் தன்னிடமுள்ள வேறு வழிகளை உபயோகித்து நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அதனால் வரும் விளைவுகளுக்குச் சத்தியாக்கிரகிகளே முழுப்பொறுப்பாளிகளாவர். ஆகவே, சத்தியாக்கிரகத்தைக் கைவிடுமாறு மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றேன்."

## வவுனியாவிலும் சத்தியாக்கிரகம்

சென்றவார நடுப்பகுதியில் தமிழ்ப்பேசும் மக்களின் சத்தியாக்கிரக இயக்கம் வவுனியாவிலும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் வவுனியா பாராளுமன்றத் தொகுதிப் பிரதிநிதியான திரு. ரி. சிவசிதம்பரம் எம். பி. அவர்களினதும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களினதும் தலைமையில் நடந்துவருகின்றது. கச்சேரி வேலைகள்யாவும் ஸ்தம்பித்துள்ளன. இம்மறியல் இயக்கத்தில் ஏராளமான பெண்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர்களும் பங்குபற்றுகின்றனர். வவுனியாத் தொகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களும் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவளிப்பதாக உறுதி கூறியுள்ளனர்.

## சத்தியாக்கிரகமும் கொம்யூனிஸ்டுகளும்

"தமிழ்ப்பேசும் மக்களின் சத்தியாக்கிரகத்தில் கொம்யூனிஸ்ட் கட்சியினர் கலந்துகொள்ள மாட்டார்கள்." இவ்வாறு ரத்கமையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் திரு. பீற்றர் கெனமன் கூறியுள்ளார்.

## மூதூர் 1-வது எம். பி. யின் திடீர்மரணம்

மூதூர் முதலாவது பிரதிநிதியும், தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரும், திருகோணமலை நகரசபைத் தலைவருமான திரு. த. ஏகாம்பரம் அவர்கள் சென்ற 23-ந் திகதி வியாழக்கிழமை இருதயநோய் கண்டு திடீர் மரணம் அடைந்தார். சத்தியாக்கிரக இயக்கத்திலே அதிதீவிரமாக உழைத்ததன் காரணமாகவே இவருக்குச் சடுதிமரணம் வந்தது காலஞ்சென்ற தலைவருக்குத் திருகோணமலை அரசாங்க அதிபரும், இராணுவ, கடற்படைத் தளபதிகளும், இன்னும் ஏராளமான பிரமுகர்களும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் தங்கள் இறுதி மரியாதையைக் காட்டினர். அன்னாரின் ஈமக்கிரியைகள் அடுத்தநாள் பிற்பகல் திருகோணமலை மயானத்தில் நடைபெற்றது.

## சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் சத்தியாக்கிரக இயக்கம் இடைவிடாது தொடர்ந்து நடைபெறுவதுடன் விஸ்தரிக்கப்பட்டும் வருகின்றது.

## மொழிப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம்?

"மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்விஷயமாகப் பிரதமர் நேருவிடமிருந்து இலங்கை ஒருபாடம் கற்றுக்கொள்ளவேண்டும். இலங்கையைக் காட்டிலும் இந்தியாவிலே பலமொழிகள்பேசும் சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்துவருகின்றனர். தமிழர் பெரும்பான்மையினராக வதியும்பகுதிகளிலே அவர்களின்மொழியைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு உரிமைவழங்குவதில் சிங்களவர் அதிகம்சிரத்தை எடுத்தல்வேண்டும். தங்கள் மதத்தையும், மொழியையும் ஏனைய மக்கள்மீது திணிப்பதில் எவரேமே வெற்றிகண்டதில்லை. சிங்களவர் எங்ஙனம் தங்கள் மொழியை நேசிக்கின்றனரோ அதேபோலத் தமிழரும் தங்கள்மொழியை நேசிக்கின்றனரென்ற கருத்தைச் சிங்களவர் தெரிந்துகொள்ளவேண்டும். இப்பிரச்சினை மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட ஒருபிரச்சினையாகும் மற்றவர்களுக்கு எது நல்லதுஎன்பதை ஒருகட்சியால் முடிவுசெய்துகொள்ள முடியாது." இவ்வாறு சம்பளக்கமிஷனின் தலைவர் திரு. வில்மட் பெரேரா அங்குவானையில்நிகழ்ந்த விழாவொன்றில் பேசியிருக்கின்றார்.

## சமயபாடமும் பாடசாலைகளும்

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான திரு. டட்லி சேனநாயக்கா களுத்துறையில் நிகழ்ந்த விழாவொன்றில் பேசியபோது: "பாடசாலைகளிலே ஒருபாடமாகச் சமயத்தைப்படிப்பிப்பது கஷ்டமாகும்; ஒருபாடசாலையில் அநேகசமயங்களைப் படிப்பிப்பது ஒழுங்கீனத்துக்கும், தாறுமாறுக்கும் வழிபண்ணுவதாகும்" எனக் கூறலாயினர்.

## பிரதமர் தாயகம் திரும்பினர்

சாம்ராச்சிய நாடுகளின் பிரதமர்கள் மகாநாட்டிற்குச் சென்றமாதத் தொடக்கத்தில் லண்டனுக்குச்சென்றிருந்த எமது பிரதமரவர்கள் சென்ற வியாழக்கிழமை சேமமாய்த் தாயகம்வந்து சேர்ந்தார். சாம்ராச்சியப் பிரதமர்கள் மகாநாட்டின்போது அவர் தமக்கும், இலங்கைக்கும் பெரும்புகழ் ஈட்டியுள்ளார்.

## நமது அச்சகம்

பரிசுத்தவாரத்தையிட்டுப் பங்குனி மாதம் 30-ந்திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் சித்திரைமாதம் 3-ந்திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சகம் மூடப்பட்டிருக்கும். 4-ந்திகதி செவ்வாய்க்கிழமையே மறுபடி வேலை ஆரம்பமாகும்.

## சிங்களத்தில் றெயில்வே வாறன்ற்கள்

அரசாங்கஊழியர்களுக்கு வழங்கப்படும் றெயில்வே 'வாறன்ற்'கள் எல்லாம் சிங்களத்திலே எழுதப்படுவதால் அவைகளைப்பெறும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குப் பெரும்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படும் 'வாறன்ற்'கள் தனிச்சிங்களத்தில்மட்டும் எழுதப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வழங்கப்படும் 'வாறன்ற்'களில் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும் விபரங்கள் கொடுபட்டிருக்கின்றன. சிங்களத்தில்மட்டும் 'வாறன்ற்'கள் வழங்கப்படுவதால் கொழும்பிலே கோட்டை றெயில்வே ஸ்ரேஷனில் கடமைபார்க்கும் தமிழ்உத்தியோகஸ்தர்கள் பெரும் கஷ்டமடைகிறார்கள். இதுவரை சுமார் மூவாயிரம் 'வாறன்ற்'கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## இராணுவ பாதுகாப்பை ஏற்கமறுத்தனர்

யாழ்ப்பாண அரசாங்கஅதிபரது உத்தரவின்பேரில் யாழ்ப்பாண மாவட்டத்திலே வசிக்கின்ற சிங்களவரின் தொகைமதிப்பு இராணுவத்தினரால் எடுக்கப்பட்டுள்ளது அவர்களின் பெயர்களையும், விலாசங்களையும் இராணுவத்தினர் எடுத்தபோது, நீங்கள் பயங்கரநிலையில் சஞ்சரிக்கின்றீர்களா? என்றுகேட்டு, அப்படியானால் நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியும், அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு வாகனமூலம் உங்களை அனுப்பமுடியுமென்று அவர்களிடம்கூறியதாகத் தெரியவருகிறது. சிங்களவாசிகள் அளித்தபதிலில், அப்படியான அச்சபயம் தங்களுக்கு இல்லையெனக்கூறி, இராணுவத்தினரின் உதவியைஏற்க மறுத்துவிட்டதாக அறியக்கிடக்கின்றது.

## யாழ்ப்பாண - மலையாளப் புகையிலை

வருகிற சித்திரைமாதம் 30-ந் திகதிக்குமுன் அங்கத்தவர்களிடமிருந்து புகையிலை பெற்றுக்கொள்ளப்படுமென்று யாழ்ப்பாண- மலையாளப்புகையிலை ஐக்கியசங்கம் அறிவித்திருக்கிறது. சங்கத்துக்குப் புகையிலை கொடுக்க விரும்புபவர்கள் உடனே மனேஜருடன் ஆலோசிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

## சிங்களத்தில் வந்தகடிதம்

தலதாபன கமிஷனரிடமிருந்து காங்கேசன்துறைப் பட்டினசபைக்குச் சிங்களத்தில்வந்த கடிதம்ஒன்றை அதன்தலைவர் சிலதமிழ்க்குறிப்புகளுடன் தலதாபன கமிஷனருக்கே திருப்பிவிட்டுள்ளார். கடிதம் தனிச் சிங்களமொழியில் இருப்பதால் ஒன்றும்விளங்கவில்லை. ஆகவே, அதனை விளங்கக்கூடிய மொழியில் அனுப்பும்படி அக்கடிதத்தின் பின்பக்கத்திலே தமிழ்மொழியிலெழுதி அதனை அவர் கமிஷனருக்கு அனுப்பியிருக்கின்றார்.

—( )—

# பிரதமருக்கு திரு. எஸ். ஜே. வி.யின் பதில்

"இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்கள் நடத்திவரும் சத்தியாக்கிரகத்தைப்பற்றிப் பிரதமமந்திரி ஆற்றிய வானொலிப் பேச்சு ஒரு சனநாயக நாட்டுப் பிரதமர் ஆற்றும் பேச்சைப் போலல்லாமல் ஒருசர்வாதிகாரி தன் நாட்டுக் குடிமக்களுக்கு விடுக்கும் எதேச்சாதிகாரக் கட்டளையை ஒத்திருந்தது. இதிலிருந்தே தமிழ்ப் பேசும் மக்களின் அவலநிலை புலனாகின்றது. அவர்கள் இன்று அனுபவிப்பது ஓர் காலனி ஆட்சிமுறையே என்பதற்கு ஐயமில்லை" இவ்வாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமரின் வானொலிப் பிரசங்கத்திற்குப் பதிலளித்தபோது குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது: "சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத்தப்படுவதனால் ஏற்படும் இடையூறுகளைப் பார்க்கிலும் மொழிப்பிரச்சினையில் தமிழ்ப் பேசும் மக்களின் ஏகோபித்த குரல் அதிக பலம் வாய்ந்தது என்பதைப் பிரதமர் உணரவேண்டும்.

"தமிழ்ப்பேசும் மக்களின் குரல் நேரிடையானது; எதிர்மறையானதல்ல இந்நாட்டு நிர்வாகத்திலும், நீதிமன்றங்களிலும் தமிழ் மொழிக்கு நீதியான அந்தஸ்து இருக்கவேண்டுமென்பதே அவர்களுடைய கோரிக்கையாகும். இதை எவ்வாறு சாதிப்பது என்பதுபற்றிய விரிவான தகவல்கள் ஏற்கனவே தமிழரசுக் கட்சியால் பிரதமருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவைபற்றித்தான் கருத்துமுரண்பாடு உண்டு. பிரதமருடைய பேச்சில் சமரசத்திற்கு இடமில்லை என்பது தெளிவாகின்றது."

## மரண அறிக்கை

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி வாசரும், பலராலும் நன்கறியப்பெற்றவருமான திரு. அ. ம. இராசையா அவர்களின் மூன்றுவது புத்திரரான திருநிறை செல்வன் சூசைதாசன் துரைநாயகம் மனுவேற்பிள்ளை சென்ற 25-3-61 சனிக்கிழமை அதிகாலை 3-45 மணிக்கு யாழ்ப்பாணம், கண்டி வீதியிலுள்ள 57/1 இலக்க இல்லத்திற் சாத்திராப்பிரகாரம் காலமாயினார். இவர் 1938-ம் ஆண்டு மார்கழி மாசம் 8-ந் திகதி பிறந்தார். அர்ச். பத்திரிசியார் கல்லூரியிற் கல்வி பயின்று மிகவும் சிறு பராயத்திலே உத்தியோகத்திற் புகுந்தார். இவர் இறக்கும்போது யாழ்ப்பாண மாநகரசபையின் கணக்காயர் பகுதியிற் பணியாற்றி வந்தார். மிகவும் திடகாத்திரமிக்க இளவலான இவரை எல்லாம்வல்ல இறைவன் சடுதியாகத் தம்பதம் அழைக்கத் திருவுளமாயினார். சிறு பராயந்தொட்டே மிகு சற்குணசாலியாய், நல்மாணவனாய், தேவபக்தனாய், தன் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் ஒரு நல்லாசிரியனாய், தான் பிறந்த சுண்டிக்குளி வட்டாரத்திலே முன்மாதிரிமிக்க ஒருவராய் விளங்கிவந்தார். தான் பணியாற்றிய அலுவலகங்களில் நல்லூழியனாய், சக ஊழியரின் உற்ற நண்பனாய், தனது மேலதிகாரிகளுக்கு அமைச்சலுள்ளவராய் விளங்கி எல்லோராலும் நன்கு மதிக்கவும் நேசிக்கவும் பட்டார்.

இவரை இழந்து நினைந்து வருந்தும் பிதா இராசையா, மாதா மரியம்மா, சகோதரர்கள் ஜே. சி. ஜே. மனுவேற்பிள்ளை, எவ். எம். மனுவேற்பிள்ளை, டி. ரி. மனுவேற்பிள்ளை, சி. வி. மனுவேற்பிள்ளை, சகோதரிகள் மேரியோசவின், மேரிமாகிறேற், மேரி அன்ரனெட், மாமன்மார் கே. எஸ். சந்தியாப்பிள்ளை, கே. எஸ். மரியாம்பிள்ளை, சிறிய தந்தையர் ஏ. பி. முத்தையா (உபதேசியார்) ஏ. யோண்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரோடு நாமும் அனுதாபப்படுகிறோம்.

இதைக் கண்ணுறும் சுற்றத்தார், நண்பர்களும், அனுதாபிகளும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு வேண்டுகிறோம்.

இவருடைய ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | மு. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஓ. | ஒருசந்தி நாள் |

### சித்திரை மாதம்—1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | ஞா. | 1 | **கர்த்தரின் உத்தானம்—பாஸ்கா ஞாயிறு** | (வி. ம.) | வெ. |
| 3 | தி. | 1 | உத்தான அட்டகத் திங்கள் | (வி. ம.) | வெ. |
| 4 | செ. | 1 | உத்தான அட்டகச் செவ்வாய் | (வி. ம.) | வெ. |
| 5 | பு. | 1 | உத்தான அட்டகப் புதன் | (வி. ம.) | வெ. |
| 6 | வி. | 1 | உத்தான அட்டக வியாழன் | (வி. ம.) | வெ. |
| 7 | வெ. | 1 | உத்தான அட்டக வெள்ளி | (வி. ம.) | வெ. |
| 8 | சனி | 1 | தவளோற்சவ சனி | (வி. ம.) | வெ. |

சத்திய வேத
# பாதுகாவலன்
1961-ம் ஆண்டு
சித்திரைமாதம் 1-ந் திகதி

## கர்த்தரின் உத்தானம்

நமது திருமீட்பர் மரித்தவர்கள் மத்தியில்நின்றும் ஒட்டோலகராய் உத்தானமானார்என்பதைக் கிஞ்சித்தேனும் தத்தளிப்பின்றி நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். நமது விசுவாசத்துக்கு அத்திவாரமும், ஆதாரமுமானது அவரது திருஉத்தானம் என்பதையும் நாம் அறிவோம். கிறீஸ்துநாதர் உத்தானமாகாவிட்டால் நமது விசுவாசம் வியர்த்தமானதென்றும், விழலானதென்றும் அர்ச். சின்னப்பரும் கூறலானார். கத்தோலிக்கராகிய நாம் எல்லாரும் இந்த வேதசத்தியத்தை விசுவசிக்கின்றோம். இதில் பெருமை கொள்ளுகின்றோம். திருச்சபையுடன் சேர்ந்து "இது கர்த்தரின் நாள். இந்த நாளில் நாம் எல்லாரும் ஆனந்தசந்தோஷங் கொள்ளுவோமாக" என நாமுஞ் சொல்லி அகமகிழ்கின்றோம்.

யேசுக்கிறீஸ்துநாதரின் திரு உத்தானத்துக்குக் கண்கண்ட சாட்சிகள் அவருடைய அப்போஸ்தலர்களும் சீஷர்களுமே யாவர். இவர்கள் ஒரு முறையல்லப் பலமுறை, ஒளிப்புமறைப்பாய் அல்லப் பிரசித்தமாய்ச் சனக்கூட்டங்களுக்கும், றோமை அதிகாரிகளுக்கும், யூதகுருக்கள் ஆசாரியர்களுக்கும் அறிக்கையிட்டிருக்கிறார்கள். "நான் யேசுநாதசுவாமியின் காயங்களைக் கண்ணாலேகண்டு, அவர் விலாக் காயத்திற் கைவிரலைவிட்டுத் தொட்டுப் பார்த்தபின் அல்லாது அவர் உத்தானமானதை நம்பேன் நம்பேன்" என்று தொம்மை அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறார். கிறீஸ்துநாதரும் அவருக்குத் தம்மைக் காண்பித்துத் தமது காயங்களைத் தொட்டுப்பார்க்கும்படி விட்டபின்னர் மாத்திரம் "என் ஆண்டவரே, என் தேவனே" யென அறிக்கையிட்டுத் தொம்மை அப்போஸ்தலர் கர்த்தரின் திரு உத்தானத்தில் விசுவாசங் கொண்டார். ஆதலால் அப்போஸ்தலர்கள் அணுப்புபவர்களாக அல்லது அணுப்புண்டவர்களாக இருந்தார்களெனச் சொல்லமுடியாத போதே அவர்களின் சாட்சியம் உண்மைச் சாட்சியம் என்பதும் மறுக்கப்படாத உண்மை.

நிற்க, கிறீஸ்துநாதருக்கும், அப்போஸ்தலர்களுக்கும் சத்துருவாயிருந்த சவுல்என்பவர் மனந்திரும்பிப் பவுல்எனும் நாமந் தாங்கி யேசுநாதர் உத்தானமானார் என்னும் உண்மையை விசுவசித்ததுமன்றி அதை எல்லாருக்கும் போதித்துத் தாமும் உத்தானமான யேசுக்கிறீஸ்துநாதரைக் கண்ணாரக் கண்டதாகச் சொல்லியிருக்கின்றார். சத்துருவான ஒருவர்—நவீனபதிதம் என நமது திருவேதத்தை ஏளனஞ்செய்த யூதருக்கு ஒரு தளகர்த்தன்போல இருந்த ஒருவர்—யேசுக்கிறீஸ்துநாதர் உத்தானமானார் எனக் கூறும்பொழுது ஓரவாரமான நியாயம் கூறியிருப்பார் என்று எவனும் சொல்லானன்றோ? ஆதலால் யேசுநாதர் உத்தானமானார் என்பதற்குச் சத்துருக்களும், மித்துருக்களும் சாட்சி சொல்வதால் அத்திருஉத்தானம் உண்மையென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலும் தெளிவானதொன்றாகும். ஆகவே, கிறீஸ்துநாதரின் உத்தானம் நமக்குப் படிப்பிக்கும் நற்பாடங்களை நாம் கற்று அதின்படிநடக்கப் பிரயாசப்படவேண்டும். அவர் மரணத்தில் நின்றும் உயிர்த்ததுபோல நாமும் பாவ மரணத்திலிருந்து பிரசாதசீவியத்திற்கு உயிர்த்தவர்களாக வேண்டும். அவர் உயிர்த்தபின் மீண்டும் மரியாதிருந்ததுபோலப் பிரசாத சீவியத்திற்கு உயிர்த்த நாங்கள் எப்பொழுதும் தேவ வரப்பிரசாதத்தில் நிலைகொள்ள இடைவிடாது பிரயாசப்படுவோமாக.

## கத். பள்ளிகளுக்கும் அரசினர் உதவி வேண்டும்

கத்தோலிக்க பள்ளிகளுக்கு அரசினர் உதவியளிக்கும் பிரச்சினை சம்பந்தமாகக் கத்தோலிக்க ஜனாதிபதி கென்னடிக்கும் கத்தோலிக்க மேற்றிராணிமார்களுக்குமிடையே விவாதம் முற்றிவருகிறது. பள்ளிகட்கு உதவி செய்தற்காக ஜனாதிபதி சுமார் 1000 கோடி ரூபா பணம் ஒதுக்கியுள்ளார். ஆனால், இதில் ஒரு சதம்கூட கத்தோலிக்க பள்ளிகட்கும், மற்றத் தனியார் பள்ளிகட்கும் அவர் கொடுக்கமாட்டாராம். ஆனால், கடந்த காலத்தில் தனியார் பள்ளிகட்கு அரசினர் ஓரளவு உதவி செய்துள்ளனர் என்பதற்கு சான்றுகள் உள. மேலும், கத்தோலிக்கர் மற்ற மக்களைப்போல அரசாங்கத்திற்கு வரி செலுத்திவிட்டு, அவ்வரியால் சேரும் நிதியில் இருந்து அவர்கள்மட்டும் தங்கள் கல்வி நிலையங்கட்கு உதவி பெறாமல் இருப்பது அநியாயம் என்றும், அதினால் 4 கோடி கத்தோலிக்கர் பாரபட்[illegible] பாதிக்கப்படுகின்றனர் என்றும், அரசினர் குறைந்த பட்சம் தனியார் பள்ளிகட்கு குறைந்த வட்டிக்கு நீண்டகாலக் கடனாவது அளிக்கவேண்டுமென்றும் கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் தீவிரமாக வாதாடி வருகின்றனர்.

# புதுவாழ்வு வாழ்வோமாக!

கிறிஸ்தவ திருநாட்களுள் பாஸ்காத் திருநாளே மிகச் சிறந்தது. அது கிறிஸ்துநாதர் சாவின்மேல் கொண்ட வெற்றியைக் கொண்டாடுகின்றது. உலகத்தை மீட்கத் தமது உயிரைப் பலியாக்கிய கர்த்தர் தாம் வாக்குப் பண்ணியபடி மரித்த மூன்றும்நாள் ஒட்டோலகராய்க் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, தமது தேவ மகிமையை அதிபிரசித்தமாக அத்தாட்சிப்படுத்தியருளினார். "தாம் மரித்ததினால் எங்கள் மரணத்தை அழித்து, தாம் உயிர்த்தெழுந்ததினால் எங்களுக்குச் சீவியத்தைத் தந்தருளினார்" என்று திருச்சபை பாஸ்காகால முகவுரையில் பாடுகின்றது.

கிறிஸ்துநாதருடைய உத்தானம் அவருடைய இரட்சணிய அலுவலின் சம்பூரணமாய் இருப்பதுடன், எமது விசுவாசத்தினதும், நம்பிக்கையினதும் அத்திவாரமாக இருக்கின்றது. "கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் போதகமும் வீண். உங்கள் விசுவாசமும் வீண்" (I கொரி. 5 : 14) என்று அர்ச். சின்னப்பர் வசனித்தார். "உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் தமது பேரில் இருக்கும்படி சருவேசுரன் யேசுக்கிறிஸ்துநாதரை மரித்தோரினின்று உயிர்ப்பித்து அவருக்கு மகிமையைக் கொடுத்திருக்கிறார்" (I இரா. 1 : 21) என்று அர்ச். இராயப்பரும் கூறுகின்றார்.

இஸ்ராயேல் மக்களைச் செம்மறிப் புருவையின் இரத்தம் சங்கரிக்கும் சம்மனசானவரிடமிருந்து காப்பாற்றியது. கிறிஸ்தவ மக்களாகிய எம்மை ஒரு செம்மறிப்புருவையின் குருதியல்ல, தேவ செம்மறிப்புருவையாகிய கிறிஸ்துநாதருடைய விலைமதிக்கப்படாத திரு இரத்தமே பாதுகாக்கின்றது. எபிரேயர் பாஸ்கா செம்மறிப் புருவையைக் கொன்றவுடன் புளித்தமாவில் செய்யப்பட்ட அப்பம் முதலியவற்றைத் தங்கள் வீடுகளிலிருந்து நீக்க வேண்டி இருந்தது. பாஸ்கா பண்டிகை நீடிக்கும் ஏழு நாட்களிலும் ஒரு துளி புளிக்காரமுமில்லாமல்வீடுகளைத் தூய்மைப்படுத்த வேண்டியவர்களாய் இருந்தார்கள். அதேபோல் நமது பாஸ்காவாகிய கிறிஸ்துநாதர் கொல்லப்பட்டபின் நாம் நம்மைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். நமது பாவங்களையும், பாவப் பழக்கங்களையும், பாவ நாட்டங்களையும் கிறிஸ்துநாதர் உயிர்த்த திருநாளோடு விட்டுவிலகிக் கிறிஸ்துநாதரைப்போல் புதுச்சீவியம் நடத்தவேண்டும். "நீங்கள் புளியாத மாவாய் இருப்பதுபோல என்றும் புதிதாய்ப் பிசைந்த மாவாய் இருக்கும்படிக்குப் பழைய புளித்த மாவைக் கழித்துத் தள்ளுங்கள். ஏனெனில், நம்முடைய பாஸ்காவாகிய கிறிஸ்துநாதர் பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால், பழைய புளித்த மாவையும், துர்க்குணம் அக்கிரமம் என்ற புளித்த மாவையுமல்ல, நேர்மையும் சத்தியமுமாகிய புளியாத அப்பத்தைப் புசித்து விருந்தாடுவோமாக" (I கொரி. 5; 7—8). பாஸ்காப் பண்டிகை யூதர்களுக்குப் புதுவாழ்வை எடுத்துக்காட்டியது. கர்த்தருடைய உத்தானத்திருநாள் நமக்குப் புதுவாழ்வைக் காட்டுகின்றது. புதுத்தீர்த்தம், புது நெருப்புடன் வீடுசெல்கின்றோம். திருச்சபையின் ஆதிகாலத்தில் பாஸ்கா திருவிழிப் பின்போதுதான் திருச்சபையில் சேர விரும்பினோருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. பாஸ்கா நாட்களில் தான் பிரசித்த பாவிகளும் பாவ மன்னிப்பைப் பெற்றார்கள். நமக்கும் பாஸ்கா திருநாள் கிறிஸ்துநாதரில் புதுவாழ்வை அளிக்கவேண்டும். இனிமேல் பூமியில் உள்ளவைகளையல்ல உயிர்த்தெழுந்த கிறிஸ்துநாதரைப் போல பரலோகத்தில் உள்ளவைகளையே நாம்நாடவேண்டும். "நீங்கள் கிறிஸ்துநாதரோடு உயிர்த்தெழுந்திருக்கிறீர்களாகில், உன்னதத்தில் உள்ளவைகளைத் தேடுங்கள்; பூமியில் உள்ளவைகளையல்ல, மேலே உள்ளவையையே நாடுங்கள். ஏனெனில், நீங்கள் மரித்தவர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் சீவியம் கிறிஸ்துநாதரோடு சர்வேசுரனில் மறைந்திருக்கின்றது...... ஆகையால், உங்கள் லௌகீக அவயவங்களைச் சாகடியுங்கள். அவையாவன :— விபசாரம், அசுத்தம், காமம், துர்இச்சை, ஒருவித விக்கிரக ஆராதனையாகிய பொருள் ஆசை......... கோபம், எரிச்சல், வஞ்சகம், அவதூறு, வெட்கத்திற்குரிய பேச்சுக்கள் ஆகிய சகலத்தையும் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதேயுங்கள். இப்படிப் பழைய மனிதனையும், அவன் கிரியைகளையும் உங்களிடமிருந்து உரிந்துவிட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாக அவரை அறியும் அறிவினால் புதுப்பிக்கப்படுகிற புதிய மனிதனை அணிந்து கொள்ளுங்கள்............ஆதலால், சருவேசுரனால் தெரிந்து கொள்ளப்பட்ட நீங்கள் பரிசுத்தரும், பிரியமுள்ளவருமாய், தயாள உள்ளத்தையும், சாந்தத்தையும், தாழ்ச்சியையும், அடக்க ஒடுக்கத்தையும், பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவர் ஒருவரைத் தாங்கி, எவனுக்காவது மற்றொருவன்மேல் முறைப்பாடு இருந்தால் அதைப் பொறுத்துக்கொண்டு, ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் ஒருவர் ஒருவரை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால், இவை எல்லாவற்றிற்கு மேலாக உத்தமதனத்தின் பந்தனமாகிய பரம அன்பைக் கொண்டிருங்கள்" (கொலோ. 3 : 1—15).

அர்ச். சின்னப்பருடைய மேற்படி புத்திமதிகளைப் பின்பற்றிக் கிறிஸ்துநாதரில் புதுவாழ்வு வாழ்வோமாக!

## 2-வது வத்திக்கான் பொதுச் சங்கமும் சாதாரணகிறிஸ்தவர்களும்

"சாதாரண கிறிஸ்தவர்கள் 1962-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் இரண்டாவது வத்திக்கான் பொதுச் சங்கத்தைப்பற்றிய அபிப்பிராயங்களையும், அதனிடமிருந்து தாங்கள் எதிர்பார்க்கும் முடிவுகள்பற்றியும் தெரிவிக்கத் தயங்கக்கூடாது. நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பவர்களாக மட்டும் இருத்தல் போதாது." இவ்வாறு வியன்னா பட்டணத்தின் அதிமேற்றிராணியாரும், வத்திக்கான் பொதுச்சங்க மத்திய ஆயத்த குழுவின் அங்கத்தினர்களில் ஒருவருமான மேன்மை தங்கிய **கருதினால் கேனிக் ஆண்டவர்** அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அண்மையில் கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது: "உரோமையிலிருந்து, அல்லது மேற்றிராணியாரிடமிருந்து தகவல்கள் கிடைக்குமட்டும் காத்திராமல் பொதுச் சங்கத்தைப்பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் கூற வேண்டும். ஏனெனில், பொதுச் சங்கத்தில் சாதாரண கிறிஸ்தவர்களின் தொண்டிற்கு சிறப்பான இடமளிக்கப்பட இருக்கின்றது. கத்தோலிக்க மக்கள் பொதுச் சங்கத்திடம் என்னத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெட்டத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டின் புதுத் தமிழாக்கம்

## தமிழகக் ஆயர்கள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

புதிய ஏற்பாட்டிற்குத் தமிழில் இப்போது இருவித மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. ஒன்று, பாரீஸ் அந்நிய வேதபோதக சபைக் குருக்களால் புதுவையில் 1857-இல் வெளியிடப்பட்டது. மற்றொன்று, யேசுசபையைச் சேர்ந்த வண. ட்றிங்கால்சுவாமிகளால் திருச்சியில் 1890-இல் வெளியிடப்பட்டது. இவ்விரு மொழிபெயர்ப்புக்களும் பல்லாண்டுகளாகப் பலர் அயராது ஆர்வமுடன் உழைத்தமையால் கிட்டிய பலன் என்பதில் சந்தேகமில்லை. அவை கடந்த நூறு ஆண்டுகளாகத் தென்னிந்திய கத்தோலிக்கருக்குப் பெரிதும் பயன்பட்டு வந்துள்ளன.

### புதுத் தமிழாக்கம் பற்றிய பிரச்சினை, 1941

எனினும் அண்மையில் தமிழ்மொழி மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது என்பதாலும், பொறுக்கான சொற்பிரயோகம், தெளிவான சொற்றொடர்கள், நடையோட்டம், பொருட்தெளிவு முதலியவற்றில் மேற்கூறிய மொழியாக்கங்களை இக்காலத்துக்கேற்றவகையில் மாற்றி அமைத்தல் அவசியம்என்பதாலும், 1941-இல் மைசூரில் நடந்த தமிழகக் கத்தோலிக்க மேற்றிராணிமாரின் கூட்டத்திலேயே புதிய ஏற்பாட்டின் புதிய தமிழாக்கம் என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. புதிய ஏற்பாட்டின், அல்லது சுவிசேஷங்களின் நிருபங்களின் எந்தப் புதுப்பதிப்பையும் கொண்டு வருதற்குமுன் தமிழக மேற்றிராணிமார்கள் அனைவரும் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும். அவர்கள் யாவரும் ஒருமுக முடிவுக்கு வந்தபின்னர்தான் 'அச்சிடலாம்' என்ற அனுமதி அளிக்கப்படவேண்டும் என்று அக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

### பிரச்சினை புத்துயிர் பெற்றமை, 1957

1957 பெப்ருவரி வரை இப்பிரச்சினையைப்பற்றி மீண்டும் பேச்செழவில்லை. இதற்கிடையே பெங்களூரிலுள்ள அர்ச். இராயப்பர் குருமடத்தில் வேதாகமவிரிவுரையாளரும், மறைநூல்பயிலும் மாணவர்களின் பொறுக்கி எடுக்கப்பட்ட ஒரு குழுவும் சேர்ந்து சுவிசேஷங்களின் புதிய தமிழாக்கம் ஒன்றைத் தயாரித்து வந்தனர். இதை அறிந்த புதுவை-கடலூர் அதிமேற்றிராணியார் 1957 பெப்ருவரியில் தமிழ்நாட்டு மேற்றிராணிமார்களிடம் கீழ்க்காணும் கேள்விகள் சமர்ப்பித்து, அபிப்பிராயம் திரட்ட முற்பட்டார்:

**1.** புதிய தமிழாக்கம் ஒன்று அவசியமா? அதை வெளியிட இது ஏற்ற சமயமா?

**2.** தமிழாக்கம் செய்யும் அலுவலைப் பெங்களூர்க் குழு தொடர்ந்து ஆற்றுவது தகுதியா?

**3.** ஏற்கெனவே அக்குழு செய்து முடித்துள்ள வேலையைப் பரிசீலனை செய்ய நிபுணர் குழு ஒன்று நிறுவுவது அவசியமல்லவா?

முதல் கேள்விக்கும் மூன்றுவது கேள்விக்கும் யாவரும் 'ஆம்' என்றும், இரண்டாவது கேள்விக்கு 'இல்லை' என்றும் பதில் தந்தனர்.

### குழு நியமனம், 1960

டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய மேற்றிராணிமாரின் ஐந்தாண்டுக் கூட்டத்தின் போது 30-9-1960-ல் தமிழக ஆயர்கள் யாவரும் தனிப்படக் கூடிப் பேசினர். அச்சமயம் புதிய தமிழாக்கம் என்ற பிரச்சினையை வேலூர் ஆண்டகை விவாதத்துக்குக் கொண்டுவந்தார். அதைப்பற்றி அனைவரும் கலந்தாலோசித்தனர். மேற்கூறிய பெங்களூர்க் குழுவின் முயற்சியால் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டுள்ள நான்கு சுவிசேஷங்களின் புதிய தமிழாக்கமும் அதற்கான முகவுரையும், குறிப்புகளும் புதுவை அதிமேற்றிராணியாரிடம் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து ஒரு நிபுணர் குழுவின்மூலம் மேற்கொண்டு வேலை செய்வதுதான் நலம் என்று எண்ணினர். ஆகவே, 22-4-1943-ல் உரோமையிலிருந்து (Pontifical Biblical Commission) தரப்பட்ட ஒழுங்கின்படி, வேதாகம ஞானத்திலும், வேதசாஸ்திரத்திலும் மிகுந்த தகுதிவாய்ந்த நபர்களைக்கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர்தான் வேதாகமத்தின் எந்த மொழி பெயர்ப்பையும் மேற்றிராணிமார்கள் தங்கள் விசுவாசிகளின் பிரயோகத்துக்கு விடலாம் என்பதைக் கருத்தில்வைத்து, நிபுணர்குழு ஒன்றை அமைப்பது என்று ஒருமனப்படி தீர்மானித்தனர். அக்குழுவுக்குப் புதுவை அதிமேற்றிராணியாரைத் தலைவராகவும், தூத்துக்குடி மேற்றிராணியாரை உபதலைவராகவும் நியமித்தனர்.

### குழுவின் அங்கத்தினர்கள்

கீழ்க்காணும் 12 குருமாரை இக்குழுவின் அங்கத்தினர்களாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் மேற்றிராணிமார்கள் யோசனை கூறினர். அதன்படி, குழுவின் தலைவர் என்ற தாப்பில், புதுவை அதிமேற்றிராணியார் இக்குருமாருக்குக் கடிதம் எழுதி அவர்களுடைய முழுமனச் சம்மதத்தைப் பெற்றார்.

1. வண. எல் லெக்ராங், வேதாகம விரிவுரையாளர், பெங்களூர்.
2. வண. ஆர். பர்க், சே. ச., வேதாகம விரிவுரையாளர், திருச்சி.
3. வண. யே. முல்லோர், வேதாகம விரிவுரையாளர், பூந்தமல்லி.
4. மோன்சிஞோர் ஆர். அருளப்பா, சென்னை.
5. வண. ஈ. உகார்த், சே. ச., ஷெம்பகனூர்.
6. வண. பி. சி. தாமஸ், மதுரை.
7. வண. எஸ். இராசமாணிக்கம், சே. ச., பாளையங்கோட்டை.
8. வண. எஸ். தனசாமி, சே. ச., திருச்சி.
9. வண. சி. எஸ். மரியாரோக்கியம், கோவை.
10. வண. எ. ஸ்தனிஸ்லாஸ், கும்பகோணம்.
11. வண. டீ. எஸ். லூர்துசாமி, புதுவை.
12. வண. எ. மிக்கேல், தூத்துக்குடி குழுவின் செயலாளர்.

இந்நிபுணர் குழுவின் ஆரம்பக் கூட்டம் வரும் கோடை விடுமுறையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போதுதான் குருமடங்களிலும், கல்லூரிகளிலும் அலுவலாற்றும் குருமாருக்கு அவகாசம் ஏற்படும்.

இந்தப் பன்னிரு அங்கத்தினருள் (மூன்று வேதாகம விரிவுரையாளர்கள் உட்பட) 6 அல்லது, 7 பேர்கள் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்படும். புதுத் தமிழாக்கம் எவ்வித கருத்துப்பிழையுமின்றி, மூல நூலுக்குப் பிரமாணிக்கமான முறையில் செய்யப்பட்டுள்ளதா என்று சரிபார்க்கும் முதன்மையான, முக்கியமான வேலையை அச்செயற்குழு ஆற்றும்.

### நிதி

இதற்குமுன் சில காரியங்கள் கவனிக்கப்படுதல் வேண்டும். சுவிசேஷங்களின் மொழிப்பெயர்ப்பும், முகவுரைகளும், குறிப்புக்களும் உடனடியாக அச்சிடப்பெற்று, அல்லது 'சைக்ளோஸ்டைல்' செய்யப்பட்டு அங்கத்தினர்கட்கு வினியோகிக்கப்படவேண்டும். அப்போதுதான் அவற்றை அவர்கள் படித்துத் திருத்தம்செய்தல் எளிதாயிருக்கும். இவ்வாறு திருத்தம் செய்யப்பெற்றபின் அவை மீண்டும் அச்சிடப்பெற்று மேற்றிராணிமாருக்குச் சமர்ப்பிக்கப்படும். அவர்களது கருத்துரைகள் திரட்டப்படும் அங்கத்தினர்களின் எழுத்து வேலைக்கும், பிரயாணத்துக்கும் பல நாட்கள் நீடிக்கக்கூடிய கூட்டங்களில் அவர்களது உணவுக்கும், மற்றும் பல செலவுகட்கும் ஒரு நிதி அவசியம் என்பது தெளிவு.

## பேசாலை—தலைமன்னார் மக்களின் பிரிவோபசாரம்

பேசாலை, தலைமன்னார்ப் பங்குக் குருவாயிருந்து, தமது அன்புகனிந்த இன்ப மொழிகளாலும், புன்முறுவல் தவழும் புனித வதனத்தாலும், அயரா முயற்சியாலும், அருந்தியாகத்தாலும் எமது உள்ளங்களை ஒருங்கே கவர்ந்து, எமது இன்பத்திலும், துன்பத்திலும் இனிதே கலந்து, எமக்கெல்லாம் ஒரு அருமைத் தந்தையாய் எம்மத்தியில் ஒரு மங்காச் சுடரேபோன்று விளங்கியிருந்த வண. பிதா ஏ. எஸ். சிங்காரயர் அவர்கள் யாழ்ப்பாணம், அர்ச். சூசைமாமுனிவரின் அச்சக மனேஜராக மாற்றலாகி எம்மைப்பிரிந்து செல்லவிருக்கிறென்ற செய்தியானது எம்மெல்லோரையும் தீராக்கவலையில்ஆழ்த்தியது. ஆயினும், எமது அருமைப் பிதாவைச் சந்தோஷமாக வழியனுப்பிவைக்க ஆயத்தமானோம்.

தலைமன்னார் அர்ச். லோறெஞ்சியார் கோவிலிலே சென்ற 12-3-61 ஞாயிற்றுக்கிழமை காலை சுவாமியவர்கள் திவ்வியபூசை நிறைவேற்றியபின் அவ்வூர்க் கிறீஸ்தவர்கள் அனைவரும் ஒருங்குசேர்ந்து அவரே முன்பு கட்டிய பாடசாலை மண்டபத்துக்கு அவரை அழைத்துச்சென்று, மாலைகள்சூட்டிப் பிரியாவிடைக் கீதங்கள் படித்து, அன்பளிப்புகள் வழங்கியதும், கோவில் சக்கிறிஸ்தாம் திரு. விக்றர் தலிமா அழகிய வேலைப்பாடமைந்த பிரியாவிடைப் பத்திரம் ஒன்று படித்துக்கொடுத்தார். கிராமவிதானையார் சுவாமியவர்களின் அருந்தொண்டுகளை எடுத்துக்காட்டி, நன்றிபாராட்டிப் பிரியாவிடை கூறினார். சுவாமியவர்கள் கோவில் வளவைச் சூழவரப் பிரமாண்டமான ஒரு மதிலைக் கட்டியெழுப்பி, அதன்மூலம் தங்கள் மனதிலே என்றைக்கும் அழியாத ஒரு ஞாபகசின்னத்தை நிறுவிவிட்டும், அவர் கோவிலைத் தீபாலங்காரஞ்செய்து தங்கள்உள்ளக்கோவிலையே அலங்காரஞ் செய்துவிட்டும், தாம் கால்வைத்த இடமெல்லாம் மோட்ச தலமாக்கிவிட்டும் போவதாகக் கூறி, அவர் பிரிவாற்றாது வருந்தினார்கள். ஈற்றில் பிரியாவிடைநாயகர் நன்றியுரையும், நல்லுரையும்கூறி அனைவரையும் ஆசீர்வதித்தார்.

அன்று சாயந்தரம் பேசாலைக்கிறீஸ்தவர்களின் பிரியாவிடைவைபவம் பெருமிதமாக நடந்தேறியது. பரிசுத்த வெற்றிநாயகியின் ஆலயத்தில் சுவாமியவர்கள் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளியதன்மேல் அனைவரும் ஊர்வலமாக அவரைப் பாடசாலை மண்டபத்துக்கு அழைத்துச்சென்றனர். மலர்மாலைகள் சூட்டப்பட்டன. பிரிவோபசாரகீதங்கள் உருக்கமாகப் படிக்கப்பட்டன. அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. கோவில் சக்கிறிஸ்தாமும், உபபோஸ்ற்மாஸ்றருமான திரு. கயித்தான் தலிமா அலங்கார சித்திரவேலைப்பாடுடன் கூடிய பிரிவோபசாரப் பத்திரம் ஒன்றைக் கனிவாகப் படித்துக் கொடுத்தனர். அதனைத்தொடர்ந்து ஆசிரியர் செபஸ்தியான் குருசும், ஆசிரியர் தூரமும் சுவாமியவர்களின் சேவைநலம் பாராட்டிச் சீரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தங்களது வெற்றிநாயகியின் ஆலயம் அவரது மகத்தான கைவேலையேயென்று பெருமை பாராட்டினர். மும்முறை கட்டளைக்குருவாக வந்து ஆலயதிருப்பணியைச் செவ்விதே முடிக்குமாறு சிரமத்தைப்பாராது, உடல்நலம்குன்றியும் உளநலம் குன்றாது, எங்கெங்கு அலையவேண்டுமோ அங்கங்கெல்லாம் அலைந்து, குறைந்தசெலவில் திறம்படத் திருப்பணியைப் பூர்த்திசெய்யவேண்டுமென்ற ஆர்வத்தால் கூடநின்று அதில் கலந்து, ஆலயத்தின் இருபக்கங்களையும் விசாலமாக்கிச் சிங்காரமிக்க மாபிள் பீடத்தையும், பலிபீடஸ்தானத்தையும் அமைத்துச் சிறப்பித்ததையிட்டு மனமடங்கா மகிழ்ச்சிதெரிவித்தனர். ஆலயத்தை அழகுபடுத்தியது மாத்திரமல்ல, தங்கள் ஆத்துமங்களையும் தமது சற்போதனையாலும், நற்சாதனையாலும் அழகுபடுத்தியதையிட்டும், மரியாயின் சேனை, பக்திச்சபை, சமாசங்களை ஞானவளப்படுத்தியதையிட்டும், ஏழைகள்மட்டில் அவர் காண்பித்துவந்த இரக்கசிந்தையையும், எவ்வெவரோடும் அன்பாக அளவளாவிப் பெருந்தன்மையாகப் புழங்கிவந்ததையிட்டும் அவரை வாயார வாழ்த்தி, அன்பும் நன்றியும் பாராட்டிப் பிரியாவிடை கூறினர். ஈற்றில் சுவாமியவர்கள் எல்லோருக்கும் மனப்பூர்வமாக நன்றித்துதி சாற்றித் தம்முடன் எல்லோரும் எப்போதும் ஒத்துழைத்து வந்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்து, எல்லோருக்கும் தமது திருக்கர ஆசி வழங்கியதும் பிரிவோபசாரவைபவம் இனிதே முடிவடைந்தது. — நிருபர்

### மரண அறிக்கை விளம்பர விகிதம்

எமது பத்திரிகையில்மரண அறிக்கை விளம்பரம் பிரசுரிக்க விரும்புவோர் பின்வரும் விகிதப்படி கட்டணம் செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு முழு (Fool's cap) பக்கக் கையெழுத்துப் பிரதிக்கு ரூபா 6-00.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்.

### 12-ம் பத்திநாதருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம்அருளுக

பவேரியாவிலுள்ள றேகென்ஸ்பூர்க் என்னும் பட்டணத்திலிருந்து 8,000 விசுவாசிகள் காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பரசருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டும்படி பரிசுத்த தந்தை 23-ம்அருளப்பருக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## "அவர் உயிர்த்தெழுந்தார், இங்கேயில்லை"

அன்புமிக்க இளைஞர்களே !

கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தார். மறைந்தசூரியன் தோன்றிவிட்டது. அனைவருக்கும் பாஸ்காச்சோபனம் கூறுகின்றோம்.

பேர்போன பெரியோரின் வரலாற்றைக் கூறுவதற்காய் "யார் அவர்" ("Who's Who") என்ற புத்தகங்கள் உண்டு. ஆனால், அவர்கள் மரித்தபின் அடக்கம்பண்ணப்பட்டிருக்கும் இடங்களைக் காட்டுவதற்கோ யாதொன்றுமில்லை. இதை எழுதுவதற்கு ஒருவன் முயன்றான். பலஆராய்ச்சிகள் மிகச்சிரமத்துடன் செய்தபின், உலகப் பிரசித்திபெற்றவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடங்களைக்கொண்ட புத்தகமொன்றை "எங்கே அவர்கள்" ("Whare's Who") என்ற நாமத்துடன் வெளியிட்டான். ஆனால், இந்த நவீனபுத்தகமோ உலகத்தின் மாபிரசித்திபெற்றவர் ஒருவரின் நாமத்தைக் கொண்டிருக்கவில்லை. இவர் பேர் யேசுக்கிறீஸ்து. ஏனெனில், இவரோ "உயிர்த்தெழுந்தார், இங்கேயில்லை."

இப்பெரும் செய்தியைத்தான் கிறீஸ்துவர்கள் "ஈஸ்ரர்" நாளில் அக்களிப்புடன் கொண்டாடுகின்றனர். சிலுவையிலறையுண்டு மரித்தயேசுநாதர் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார் என்றஉண்மை மறுக்கவியலாத சான்றுகளைக் கொண்டது.

1. அப்போஸ்தலர்களே திறந்திருந்தகல்லறையின் கண்கண்ட சாட்சிகள். உயிர்த்த யேசுநாதருடன் 40நாட்கள் புழங்கிப் பழகியவர்கள்.

2, சத்துராதிகளின் ஆரவாரமும், அவர் உயிர்க்கவில்லையென ஒப்பிக்கப் பொய்ச்சாட்சிகளை ஆயத்தப்படுத்திய மாதிரியும் வியப்புக்குரியவை.

3. அப்போஸ்தலர்களல்லாதோரான பரிசுத்த ஸ்திரீகளுக்கும், வேறு சீஷர்களுக்கும் உயிர்த்தஆண்டவர் தம்மைக் காண்பித்திருக்கிறார்.

4. இதையே அடிப்படை உண்மையாகக்கொண்டு இன்றுவரையும் திருச்சபையானது போதகம்செய்து வந்ததுமல்லாமல், இவ்வுண்மைக்காக அப்போஸ்தலர்களும், இலட்சக்கணக்கான மற்றோரும் தங்கள்உயிரையும் துறந்திருக்கின்றனர்.

5. நீங்களும் நானும் கிறீஸ்துவர்களாயிருப்பதும் இவ்வுண்மையில் நாம் கொண்ட விசுவாசத்தினாலேயே. இதனால்தான் நாம் யேசுநாதர்உயிர்த்த இந்நாளில் சந்தோஷம் கொண்டாடுகிறோம். திருச்சபைத்தாயானது வெண்ணுடை தரித்துத் தனதுபீடங்களை அலங்கரித்துக் காட்சியளிக்கின்றது.

கிறீஸ்துநாதருடைய கல்லறை இன்று வெறுமையாய் இருப்பதால்தான் எம்முடையதும் ஒருநாள் வெறுமையாகி, நாமும் கல்லறைகளைவிட்டுப் புறப்படுவோமெனக் காத்திருக்கிறோம்.

பின்வரும் வாக்குறுதியாளர் இம்மாதத்தில் தங்கள் ஜெனனதினத்தின் ஞாபகத்தைக் கொண்டாடுவர்.

| | | |
|---|---|---|
| 44 | எனசி வியோனு கமீல், | (சித்திரை 10). |
| 51. | எஸ். மரியாம்பிள்ளை, | (சித்திரை 14). |
| 33. | றெஜினேல்ட் விக்றோறியா, | (சித்திரை 27). |
| 21. | எஸ். பி. யோசேப், | (சித்திரை 28). |

ஜெனன தினத்திலும்பார்க்க, உலகமுடிவில் எமதுகல்லறையே எமக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டியது. எமது இரட்சகரைப்போல அட்சயம், இலகு, சூட்சம், பிரகாசமெனும் கொடைகளுடன் அதிலிருந்து உயிர்த்தெழுவோமல்லவா?

ஞானப்பிதா

—*—

# வெற்றி கொண்டார்

— "ஜெயம்" —

"சாட்டைகளா லடித்தபின்பு கொலைசெய்வார்கள்
சகந்தனிலே மூன்றாம்நாள் உயிர்ப்பேன்" என்று
காட்டுகின்ற வேதமொழிச் சான்று காணக்
கன்னெஞ்சக் காவலர்கள் நடுங்கி வீழ
ஈட்டிமுனை ஆணிகளாற் பிளந்த மேனி
எழில்மின்ன லொளி பொங்கி இலங்கி நிற்க்
மீட்டெழுந்து கல்லறைநின் றுயிர்த்தார் ஞான
மேய்ப்பனவர் அலகையினை வெற்றிகொண்டார்.

●

"மீன்வயிற்றில் யோனுஸ்மீண் டெழுந்த வாறுய்
மேதினியி னுள்ளத்து ளுயிர்ப்பேன்" என்று
தான் மொழிந்த திருவாக்கின் தகைமை காணத்
தருக்குற்ற யூதர்களின் இராசாவென்னக்
கூன்குருடு செவிடர்க்கு மரணித் தோர்க்கும்
குணந் தந்தோன் கல்லறையிற் புதைத்துக் காத்த
ஊனுடலுக் குயிர்தந்து சூட்சத் தோடு
உயிர்த்தெழுந்தே அலகையினை வெற்றி கொண்டார்.

●

"பன்னரிய நிந்தையவ மான மேற்றுப்
பாருலகில் தமைத் தாழ்த்திக் கொண்டதாலே
அன்னவரின் மகிமையினை உயர்த்த வேண்டி
ஆதிபரன் யாவர்க்கும் மேலோன் என்னும்
உன்னதஞ்சேர் நாமத்தை யளித்தார்" என்ற
ஒப்பரிய பொன்னுரையின் உரைகல்லாக
மின்னிலகு அச்சயத்தி னோடு தூய
மீட்பர் நர கலகையினை வெற்றி கொண்டார்.

# ஓர் பாலிய வேதசாட்சி

1563-ம்ஆண்டு ஒருநாள் பம்பாய் நகருக்கருகிலுள்ள காம்பே துறைமுகத்திலின்று புறப்பட்டுக்கோவை மாநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த போர்த்துக்கேயருக்குச் சொந்தமான இருவர்த்தகக் கப்பல்கள், மலையாள நாட்டாரான சில கடற்கொள்ளைக்காரரால் திடீரெனத் தாக்கப்பட்டு அவர்கள் கைவசமாயின. இக்கப்பல்களில் கோவை செல்லும் சிலபிரயாணிகளும் இருந்தனர். கொள்ளைக்காரர் இவர்கள் அனைவரையும் கைதிகளாக்கிக்கொண்டனர். இவ்வாறு கைதிகளாக்கப்பட்டவர்களுள் கிறிஸ்தவ வாலிபன் ஒருவன் இருந்தான் கொள்ளைக்காரரின் தலைவன் வாலிபனின் முகவசீகரத்தில் ஈடுபட்டு அவன்மீது பாசங்கொண்டு அவனை எவ்விதத்திலும் கிறிஸ்து வேதத்தை மறுதலிக்கச் செய்ய வேணுமென்று தீர்மானித்து, அவன் சிரசில் தன் மதச்சின்னம் ஒன்றைத் தரிப்பித்தனன். தன் தனயனின் விசுவாசத்தைப் பறிப்பதற்கென்றே தளகர்த்தன் இவ்வண்ணம் தன் புத்திரன்பால் நடந்துகொண்டானென்னத் தந்தை உணர்ந்து, மனம் புழுங்கி. இவ்விஷயத்தை இரகசியமாகத் தெரிவிக்கவே, வாலிபன் முதவில் ஆச்சரியப்பட்டானெனினும், சிறிது விதானித்தபின்னர், நீசக் கொள்ளைக்காரரின் ..ர்க்கருத்தையறியாது, அச்சின்னத்தை அணிந்து கொண்டதற்காக விசனமுற்றது தவிர, தான் ஞானத்தீட்சைபெற்றபோது சர்வேசுரனுக்குக்கொடுத்த வார்த்தைப்பாடுகளைத் தன் உயிரைக் கொடுத்தென்கிலும் காப்பாற்றுவேன் என்று தன் அருமைப்பிதாவுக்கு வாக்குறுதி கொடுத்ததும், பெற்ற மனம் மகிழ்ந்து சாந்தியடைந்தது.

கொள்ளைக்காரர் கோட்டக்கல் என்னும் தங்கள் துறைமுகம் வந்து சேர்ந்ததும், கொள்ளைப் பொருட்களைத் தங்களுக்குள்பங்கிட்டுக்கொண்டதுமன்றி, கைதிகளையும் தங்கள் பந்துக்களுக்கு அடிமைகளாகப் பெருந்தொகைக்கு விற்றனர். நமது கிறிஸ்தவ வாலிபனையும், அவன் தந்தையையும் கள்வர் தலைவன் தனது கைவசமாக வைத்துக்கொண்டான். இங்ஙனம்,கிறிஸ்தவர்களின் ஜென்ம விரோதிகளாகிய கொடூரகுணம் படைத்த கொள்ளைக்காரர்களுக்கு அடிமைகளாயிருக்கநேர்ந்தகிர்ப்பாக்கிய நிலைமையைநினைத்து மனம்வாடி வருந்தினர் தந்தையும் தனயனும்.

இத்தருணம் திருடர் தலைவன் நமது வாலிபனைத் தனது மதத்தில் சேர்த்துவிடுவதுமன்றி, அவனுக்குத் தன் புதல்வியை மணஞ்செய்து தரவும் தீர்மானித்துவிட்டனன். விவாகோற்சவ தினமும் குறிக்கப்பட்டாயிற்று. இதற்குச் சிலநாட்களுக்கு முன் பையன் சத்தியவேதத்தை மறுதலித்து, இந்த நூதன மார்க்கத்தில் சேர்வதற்கு அவசியமான சடங்குகளுக்கு வேண்டிய சகலமும் தயாராயின. பையனின் தந்தை இதையெல்லாம் அறிவாரெனினும், இந்த அக்கிரமச் செயல்களைத்தடுக்க ஒரு அடிமைக்கு எங்ஙனம் வலிமையுண்டு? குறித்ததினத்தன்று கடற்கொள்ளைக்காரரும், சிப்பந்திகளும் இன்னும் பல துஷ்டர்களும் பாலியனை மிக்க ஆடம்பரச் சிறப்புடன் பவனியாகக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றனர். இதையெல்லாம் கண்ட இளைஞன் மிக்க பிரமிப்படைந்து, "என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? ஓர் அடிமைக்கு இத்தனை ஆடம்பரம் எதற்கு? ஒருவேளை நான் வேதத்தை மறுதலிக்கும்படி நீங்கள் எடுக்கும் உபாயம் ஆக்கும் இது; இதற்கு நான் ஒருக்காலும் சம்மதியேன். என் கர்த்தரும் ஆண்டவருமாகிய யேசுக்கிறிஸ்துநாதரை மறுதலிக்க ஒருபோதும் துணியேன். உங்கள் மதச்சின்னத்தை நான் முதலில் அணியச் சம்மதித்தது என் அறியாமையினாலன்றி, வேறெதனாலுமன்று. நீங்கள் என் உயிரை வாங்கினாலும் நான்மட்டும் கிறிஸ்து வேதத்தைத் துறவேன்" எனத் தைரியமாகக் கூறினான். இத்தகைய திடமான வார்த்தைகளை ஒரு இளைஞனிடம் எதிர்பார்க்கவில்லையாதலின், கொள்ளைக்காரர் மிக்க ஆச்சரியமடைந்தனர்.

தலைவனோவெனில், தன் அடங்காக் கோபத்தை வெளிக்காட்டாது வேறொருவகையாய்ப் பையனை வஞ்சிக்க எண்ணினான். அதாவது தன் அழகு சௌந்தரியமுள்ள புதல்வியைக்கொண்டு பாலியனைச் சோதிக்க வேண்டுமென்பதே. அவ்வண்ணமே தன் புத்திரியை விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்களால் அழகு சொரியும்படி அலங்கரித்து. அவளைக்கொண்டு வந்து இளைஞன்முன் விடவே, அவளும் தன் தந்தையின் விருப்பத்திற்கிணங்கிப் பற்பலவகையில் நமது பாலிய வீரனைச் சோதிக்கத் தலைப்பட்டனள். அவனைத் தன் அழகில் ஈடுபடும்படி செய்யத் தன்னாலான மட்டும் முயன்றும் பயனில்லை. தன் விருப்பத்துக்கு அவன் இணங்காதது கண்டு தன் கையிலிருந்த மதச்சின்னத்தை அவன் தலையில் வைத்தனள். ஆனால், அவன் உடனே அதை எடுத்து அவள்கையில் திரும்பக் கொடுத்துவிட, அதைக் கவனியாததுபோல அவள் பாசாங்குசெய்து, திரும்பவும் அதை அவன் சிரசிலேயே வைத்துவிட்டுப் புன்னகைபுரிந்தாள். பாலியனோவெனில், இந்த மதச்சின்னத்தை வாங்கி அணிந்து கொள்வது கிறிஸ்துமதத்தை மறுதலித்துவிட்டு இப்புதிய மார்க்கத்தைத் தழுவிக்கொண்டதற்குச் சமா

(அடுத்தபக்கம் பார்க்கவும்)

## சுவிசேஷ சிந்தனை

**(உயிர்த்த ஞாயிறு மாற். 16 : 1—7)**

பூமியில் மண்ணுக்குள்ளே விதைத்த விதையானது நவமான உயிர் கொண்டு தளைவிரித்து எழுந்தது போல வெள்ளி சாயந்தரம் சிலுவையில்நின்று இறக்கி அடக்கஞ்செய்யப்பட்ட நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துநாதர் கல்லறை என்கிற மண்ணுக்குள்ளேயிருந்து உயிர்த்தெழுந்தார்.

அதெப்படியென்றால் தாம் திருவுளம்பற்றின வாக்கியத்தின்படியே, மரித்த மூன்றாம்நாள் கல்லறையை விட்டுத் தம்சொந்த வல்லமையினாலே ஆத்தும சரீரத்தோடும், ஐந்து காயத் தழும்புகளோடும், விருதுக் கொடியோடும் ஓட்டோலகமகிமை பிரதாபிக்கிற வீரசூரராயனுக எழுந்தருளினார்.

இவ்வுத்தானம் உண்மையாகவே இவர் உலகத்தின் அதிபதி என்று காண்பிக்கிறது. இது திருச்சபையின் பிரதான சத்தியங்களில் ஒன்றாகும்.

ஆகையால், இத்திருநாளைக் கொண்டாடும் நாமும் எம் பாவமரணத்தில் நின்று பிரசாத சீவியத்தையடையவும், இவ்வுண்மையை அறியாதவர்கள் உண்மைவிசுவாசத்தைப் பெறவும் அவரிடம்மன்றாடி நற்கருணை பெறப் பிரயாசைப்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் பக்கம்

# தொழிலாளரின் உரிமைச் சாசனம்

### 13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

(முன்தொடர்ச்சி)

**2-ம்பாகம்**

### தொழிற்பிரச்சனையும் திருச்சபையும்

**1. அடிப்படையான கொள்கைகள்:**

**(அ) வேதானுசாரமின்றி விமோசனமில்லை:**

எமது ஸ்தானத்திற்குரிய சுதந்திரத்தைக்கொண்டு நம்பிக்கையோடு இவ்விடயத்தைப்பற்றிப் பேசுகிறோம். இது விஷயத்தில் திருச்சபையின் போதனைகளைக் கவனியாமல் மனிதரெல்லாரும் கூடிப்பிரயாசப்பட்டாலும், அவர்களுடைய முயற்சிபலனற்றுத்தான் போகுமென்பது நிச்சயம். ஏனெனில், இந்தப் பிரச்சனையை ஒழிக்க, அல்லது அதன் கொடூரத்தைக் குறைக்கக்கூடிய போதனைகளைத் திருச்சபை ஒன்றே சுவிசேஷ அதிகாரத்தைக்கொண்டு வற்புறுத்தி வருகின்றது. திருச்சபை மனிதனுக்கு நல்லறிவைப் புகட்டுவது மாத்திரமல்ல, தனது கற்பனைகளாலும், போதகங்களாலும் ஒவ்வொரு மனிதனுடைய சீவியமும், நடத்தையும், நல்வழிப்பட வேண்டுமென்றும் பிரயாசப்பட்டுக்கொண்டு வருகின்றது. அல்லாமலும், அநேக நன்மைகளுக்கு ஆதாரமான பலஸ்தாபனங்களும திருச்சபையில் உண்டு. இவைகள் மூலமாகவும், திருச்சபை தொழிலாளிகளின் நிலைமையைச் சீர்ப்படுத்தி, விருத்திசெய்துகொண்டு வருகின்றது. தொழிலாளிகளின் உரிமையைப்பற்றி ஆலோசித்து, நடைமுறையில் அவைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று எல்லாருடைய உதவியையும், ஒத்துழைப்பையும் நாடுவதில் திருச்சபை தன்னாலான பிரயத்தனங்களையும் செய்துவருகின்றது. இந்த நோக்கங்கள் கைகூடவேண்டுமானால், தக்க அளவில் நியாயமானமுறையில் அரசாங்கமும் தனது அதிகாரத்தாலும், சட்டங்களினாலும் உதவிபுரிய வேண்டும் என்பதையும் திருச்சபை மறந்துபோகவில்லை.

**(ஆ) உழைப்பும், துன்பமும் ஒழியாது:**

மனித சீவியத்தினின்று பிரிக்கமுடியாத வாழ்க்கைநிலைமைக்கு நாம் உள்ளாகித்தான் ஆகவேண்டும் என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. முதலில் எல்லாரும்இதை அங்கீகரிப்பது அவசியம். ஏனெனில், மனித சமூகத்தில் எல்லோரையும் ஒரேசம நிலைக்குக் கொண்டுவருவது கூடாத காரியம். எல்லாரையும் ஒரேசம நிலைக்கு கொண்டுவந்துவிட வேண்டுமென்று பொதுவுடைமைவாதிகள் தங்களால் ஆனமட்டும் பிரயாசப்படலாம். ஆனால், இயற்கைக்கு மாறுபாடாகச் செய்யும்முயற்சிகள் எல்லாம் வீண்முயற்சிகளாய்த்தான் போகும். இயல்பாகவே மனிதர் மத்தியில் பல முக்கியமான வித்தியாசங்கள் இருக்கின்றன. சக்தி, திறமை, யூகம், சுகம், பலம் இவற்றில் மனிதர் ஒருவருக்கொருவர் வித்தியாசமுள்ளவர்கள். இவ்விதம் வித்தியாசமான நிலையில் இருப்பதால், அவர்கள் சொத்துச்சுதந்திரங்களிலும் வித்தியாசமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வித வித்தியாசத்தினால் தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் எவ்வளவோ அனுகூலம் உண்டு. பொதுச்சீவியமும், தனிச்சீவியமும் நன்குநடைபெற வேண்டுமானால் அவற்றிற்குரிய பற்பல அலுவல்களைக் கவனிக்க வெவ்வேறான திறமை உள்ளவர்கள் வேண்டும். இவ்விதம் கவனிக்க வேண்டிய கடமைகளில் ஒவ்வொருவனும் சாதாரணமாய்த் தன் அந்தஸ்திற்கேற்ற பாகத்தை தெரிந்து கொள்கின்றான்.

சரீர உழைப்பு விடயமாகச் சொல்லப்போனாலும ஆதிமனிதன் தவறிப்போவதற்குமுன் இருந்த பாக்கியமும், பரிசுத்தமுமான அந்தஸ்திலே நிலைத்திருந்தாலும்கூட ஒருவேலையுமின்றிச் சும்மாய் இருந்திருக்கமாட்டான். அப்போது வேலை அவனுக்குச் சுயேச்சையாய்ச் செய்யக்கூடியதும் மனோகரமானதுமாக இருந்திருக்கும். ஆனால், இப்போது அது நிர்ப்பந்தமுள்ளதாகவும், கீழ்ப்படியாமைக்குத் தண்டனையாகவும் இருக்கிறது. "பூமிஉன்நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கிறது. உன்வாழுளெல்லாம நீவருந்தி உழைத்து அதன்பலனைச் சாப்பிடுவாய்" (ஆதி. 3: 17). வேலையைப்போலவே சீவியத்தின் மற்றத்துன்பங்களும் கஷ்டங்களும் உலகில் ஒருநாளும ஒழியாது; எப்போதும் இருந்தே தீரும். ஏனெனில், பாவத்தின்பலன் கசப்பானது; அனுபவிக்கவும் கஷ்டமானது; உயிர் உள்ள அளவும் அது மனிதனைவிட்டு அகலாது. ஆகையால், துன்பப்படுவதும், கஷ்டங்களைச் சகிப்பதும் மனிதனுடைய சீவியத்தில் தவிர்க்கமுடியாத பாகங்கள். மனிதன் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் தன்னுடைய தீரபராக்கிரமங்களினாலோ, அல்லது தந்திரஉபாயங்களினாலோ தனது சீவியத்தைப் பீடித்து நிற்கும் துன்பதுரிதங்களை முற்றிலும் நீக்கிவிட முடியாது. ஆனால், இப்படி முற்றிலும் நீக்கிவிடமுடியும் என்பவர்கள்—கஷ்ட நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயிருக்கும் சனங்களைப்பார்த்து, "நீங்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களிலிருந்து விடுதலை அடையலாம்; கலக்கமற்ற அமைதியும் மாறாத இன்பமும் இவ்வுலகில் உங்களுக்கு உண்டாகும்," என்று சொல்லுகிறவர்கள்—சனங்களை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பொய்ப்பிரசாரங்களினால் தற்காலத்தில் இருப்பதைவிட அதிகதீமைகளைத் தான் கொண்டுவந்து விடுவார்கள். உலகம் என்ன நிலையில் இருக்கிறதோ அந்த நிலைமையில் அதை நோக்குவது தான் நன்மைபயக்கும். அதோடு உலகதுன்பங்களுக்கு ஒருபரிகாரம் தேடவேண்டும்.

**(இ) கிறீஸ்துநாதர் உழைப்பையும், துன்பத்தையும் இனிதாக்கியுள்ளார்:**

யேசுக்கிறீஸ்துநாதர் தமது இரட்சணியத்தின் பலன்களை நமக்கு ஏராளமாகக் கொடுத்தாலும், அதனால் எமது இந்த முடிவுள்ள சீவியத்தோடு இரண்டறக்கலந்துள்ள கஷ்டதுன்பங்களை விலக்கிவிடவில்லை. அவைகள் நாம் புண்ணிய வழியில் நடப்பதற்குத் தூண்டுதலாகவும், நமது பேறுபலன்களை அதிகரிப்பதற்கு ஏற்றசாதகமாகவும் இருக்கின்றன. நாமும் இரட்சகருடைய இரத்தம் தோய்ந்த பாதச்சுவடுகளைப் பின்பற்றினால் ஒழிய நமக்கு நித்தியசம்பாவனை கிடைக்குமென்று நம்பமுடியாது. "நாம் அவரோடு கூடப்பாடுபட்டால் அவரோடு கூட அரசாள்வோம்" (2 திமோ. 2: 12). கிறீஸ்துநாதர் தமது வேலைகளையும், பாடுகளையும் தாமாகவே விரும்பி ஏற்றுக்கொண்டதன் நிமித்தம், சகல துன்பங்களையும், வேலைகளையும் ஆச்சரியமானவிதமாய்—மனோகரமானவைகளாக மாற்றியுள்ளார். அவர் காட்டியிருக்கும் முன்மாதிரிகையால் மட்டுமல்ல, அவர் தந்த அருளினாலும் மோட்சபாக்கியத்தின் மீது நமக்கு அளித்துள்ள நம்பிக்கையாலும் நமது துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் சகித்தல் இலகுவாகிவிட்டது. ஏனெனில், "இம்மையில் இலகுவாயும், ஒரு கொடிப்பொழுதுக்கு மாத்திரம் இருக்கிற துன்பமானது நித்தியகனத்தை உடைய மகிமைப்பிரதாப மகத்துவத்தை அளவின்றிப் பெறுவிக்கும்" (2 கொரி. 4: 17).

(வளரும்)

## ஓர் பாலிய வேதசாட்சி

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

னம் என்பதை நன்குணர்ந்து, தன் உறுதியான தீர்மானத்தைப் பகிரங்கமாகக்காண்பிக்குப்பொருட்டுத் தன் தலையில் அப்பெண்வைத்த சின்னத்தை எடுத்துத்தரையில் எறிந்துவிட்டதுமன்றி, அதைத் தன் காலால் மிதித்தனன். இதைக்கண்ட அந்தப் பெண் கலங்கிப் பயந்து ஓட்டம் பிடித்தனள்.

இங்ஙனம் நமது பாலியதீரன் தன் காலால்மிதித்து அவமானப்படுத்துவதைக் காணச்சகியாத கொடிய துஷ்டன் ஒருவன் கோபாவேசங் கொண்டு தன்னுடைவாளை உருவி மதச்சின்னத்தை மிதித்த காலைத் துண்டாக வெட்டியெறிய இளைஞன், ஆறுகப்பாய்ந்தோடும் தன் உதிரத்தில் விழுந்தனன். எனினும், தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்து கிறிஸ்து யேசுவின் திருநாமத்தைப் புகழ்ந்துபாடித் துடிப்பதைக்கண்ட மிலேச்சன் இன்னும் கடுங்கோபம் கொண்டு கிறிஸ்துவின் பாலியவீரனின் சிரசை ஒரேவெட்டாய்வெட்டி விழ்த்தியதும், வேதசாட்சியின் மாசில்லா ஆத்துமம் நித்திய சம்பாவனையை அடையத் தீவிரமாய் மோட்சம் போய்ச்சேர்ந்தது.

இவ்வதிசயக் காட்சியைக் கண்ணுற்ற மற்றக் கிறிஸ்தவக் கைதிகளனைவரும் மனமகிழ்ந்து ஆண்டவரைவாழ்த்திப் புகழ்ந்தனர். இவர்கள் தங்கள் சுற்றத்தாரால் மீட்கப் பெற்றுக் கோவைமாநகர் சென்ற காலை நமது பரிசுத்த வேதத்துக்காகத் தன் உயிரைக் கொடுத்துச் சாட்சிபகர்ந்தபாலிய வீரனின் அரிய சரிதையை ஆதியோடந்தமாய்ச் சகலருக்கும் எடுத்தோதி ஆனந்தமடைந்தனர்.

வேதசாட்சியின் புனித உடல் விரோதிகளால்கடலில்எறிந்துவிடப் பட்டதாகக்கூறப்படுகின்றது. இந்த அற்புத பாலிய வேதசாட்சியின்நாமதேயம் என்ன என்பதைக் கண்டு பிடிக்கக்கூடவில்லை. எனினும், கிறிஸ்துவின் உத்தம வீரனின் நாமதேயம் ஜீவபுத்தகத்தின்கண் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன என்பது நிச்சயம். கடலில் எறியப்பட்ட வேதசாட்சியின் பரிசுத்த சரீரம் கடைசிநாளில் உயிர்த்தெழுந்து நித்தியத்துக்கும் மகிமையடைந்து பிரகாசிக்கும் என்பதற்கும் சந்தேகமில்லை.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அன்பான சதாசகாய் மாதா! ஆறுதலின் ஊற்றே! நம்பினோர்களின் அடைக்கலமே!

நான் எனது பிரசவத்தின்போது உமது உதவியை நாடினேன். எனது பிரசவகாலம் நிறைவேறும் முன்னமே, எனது வயிற்றினுள் குழந்தை இறந்துவிட்டதென வைத்தியர் என்னைக் கைவிட்டனர். குழந்தையைப் பிரசவிப்பதே மிகக்கஷ்டமெனக்கூறிவிட்டனர். தாயே! வைத்தியரால் கைவிடப்பட்ட நான், தவறாது சகாயம்தரும் உம்மை நம்பி வேண்டினேன். என்ன ஆச்சரியம்! வைத்தியர் என்னை முற்றாகக் கைவிட்ட மறுநாள் நற்சுகத்துடன் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தேன். அன்னையே! உமது சகாயத்தினாலேயே இது நிறைவேறியது. உமது நாமம் என்றும், எங்கும் புகழப்படுவதாக.

Mrs. B. S. A. Pillai.

## கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞான ஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியைகளுக்கு ஒரு விடுதி ஞான ஒடுக்கம் பாசையூர் சென் இறப்பாயேல் கன்னியர் மடத்தில் 26-4-61 புதன் மாலை 6 மணிக்குத் தொடங்கி 30-4-61 ஞாயிறு காலை 7 மணிக்குத் திவ்விய பூசைப்பலியுடன் முடிவுபெறும்.

இந்த ஞான ஒடுக்கத்தில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியைகள் மேற்படி மடத்துச் சங். தாயார் அவர்களுக்குச் சித்திரைமாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அறிவித்து இடஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மி. மரிய மார்செலா
காரியதரிசி

யாழ்ப்பாண மேற்றிராசனக்
கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 3130**

யாழ்ப்பாணம், நல்லூர், 278, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
கிறிஸ்தியன் புறொவிடன்ற் சழகம்
(மட்டுப்படுத்தப்பட்டது.)
— வழக்காளி.

எதிராக

இல. 70/20, மத்தியூஸ்வீதி, யாழ்ப்பாணம்

1. கபேரியல் டேவிட் (மறுபெயர்) அல்பேட்டும்,
2. மனைவி அன்னம்மாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 3130-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1961-ம்ஸு மேமீ 6-ந்உ (6-5-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1330-ம், மேலும் ரூபா 1,000-க்கு 9-11-59 திகதி தொடக்கம், 23-2-60 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 11% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு. ரூபா 203-90 சதம். செலவில் ரூபா 100 கொடுபட்டிருக்கிறது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோவிற்பற்று, சுண்டிக்குளிஇறை "கற்குளம் வயல் இலகடியும், குளத்து வயலும்" நிலப்பரப்பு 3, குளிகள் 10 $\frac{3}{10}$ கல்வீடும், கிணறும், பயிர்களும் மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும். இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 197-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் படத்தில் 5-வது லொட்என அடையாளமிடப்பட்டிருக்கிறது. இதற்கு எல்லை: கிழக்கு—படத்தின்படி ஸ்ரீமதி A.P. மாஸ்டனுக்குரிய லொட் 6 வடக்கு—படத்தின்படி ஸ்ரீபன் அல்போன்சஸ்சுக்குரிய லொட் 7. மேற்கு—படத்தின்படி கபேரியல் சின்னத்தம்பிக்குரிய லொட் 4. தெற்கு—படத்தின்படி அடையாளமிடப்பட்ட லொட் a. 5a-க்குப் பாதையின் ஒரு பகுதியும் இதடங்கலும்.

பிரசித்த நொத்தாரிஸ் D. இராசதுரை அவர்களால் 25-7-56-ல் முடிக்கப்பட்ட 3105-ம் இலக்க ஈட்டுறுதியின்படி வழக்காளியின்பேரில் இவ்வாதனம் ரூ.3,000-க்கும், வட்டிக்கும் முதலீடாக அமைந்துள்ளது. இவ்வாதனம் D. 205/124-ல் பதியப்பட்டிருக்கிறது.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
யாப்பாணம், 18-2-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## பார்ப்பரசர் தமது சகோதரரைப் பிரதிநிதியாக அனுப்பினார்

சென்றமாத நடுப்பகுதியில் ஒல்லாந்தில் உள்ள "பேர்கன் ஒப் சூம்" என்ற இடத்தில் பாப்பரசரின் குடும்பப் பெயர்கொண்ட ஒரு பாடசாலை திறக்கப்பட்டபொழுது பாப்பரசரின் இளைய சகோதரராகிய யூசெப்பெரொங்கால்லி அவர்கள் பாப்பரசரின் பிரதிநிதியாகச் சமுகமளித்தார். அவரோடுகூடப் பாப்பரசர் பிறந்த இடமாகிய செட்டோ இல்மொன்றே என்ற நகரத்தின் தலைவரும் சமுகமளித்தார்.

* * *

## 12-ம் பத்திநாதருக்கு நினைவுச் சின்னம்

12-ம் பத்திநாத பாப்பரசருக்கு ஓர் ஞாபக சின்னம் நிறுவுவதற்கு பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் பல கருதினல்மாரைக்கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளார். 12-ம் பத்திநாத பாப்பரசரின் உருவச் சிலையொன்றை அர்ச். இராயப்பர் மகாலயத்தில், அர்ச். செபஸ்தியார் சிற்றாலயத்தின் ஓரத்தில், 11-ம் பத்திநாதரின் உருவச் சிலைக்கு எதிரே நிறுவுவதென்று அக்குழு தீர்மானித்துள்ளது. கலைவல்லுனர் பலர் தயாரித்த அநேக சிலைகளிலொன்று தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இதை நிறுவுவதற்குரிய வேலைகள் இனி ஆரம்பமாகும்.

* * *

## கையிற்றியில் 3-வது மேற்றிராணியார் நாடுகடத்தப்பட்டார்

சென்ற மாத நடுப்பகுதியில் கையிற்றி அரசாங்கம் அதிவந். றெபெட் டேலேகோனேவ் மேற்றிராணி ஆண்டவர் அவர்களை நாடுகடத்தியுள்ளது. சில குழப்பக்காரர் மேற்றிராணியாரின் இல்லத்தில் புகுந்து, கொள்ளையடித்து ஆர்ப்பாட்டம் செய்ததன் விளைவாக, மேற்றிராணியார் அரசினரால் நாடுகடத்தப்பட்டார். இவர் பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவர். அரசினரால் நாடுகடத்தப்பட்ட மேற்றிராணியாரின் தொகை இப்போது மூன்று ஆகியுள்ளது. இவருக்கு முன் நாடு கடத்தப்பட்ட மேற்றிராணியார் ஒரு சுதேசியாவர்.

* * *

## பாப்பரசரின் சொந்தத் திருநாள்

அர்ச். சூசையப்பரின் தினமாகிய சென்ற மாதம் 19-ந் திகதி பெருந்திரளான றோமைவாசிகளும், யாத்திரிகர்களும் றோமாபுரியின் அர்ச். பேதுருவானவரின் மகா ஆலயத்துக்கு முன்னுள்ள பிரமாண்டமான சதுக்கத்தில் ஒன்றுகூடிப் பரிசுத்த பாப்பரசருக்கு தங்கள் வந்தனைகளையும், அன்பையும் காண்பிக்க மிகவும் ஆரவாரப்பட்டனர். அன்று பாப்பரசருடைய திருநாளாய் இருந்ததே இதற்குக் காரணமாகும். பாப்பரசர் ஞானஸ்நானம் பெற்றபொழுது அவருக்கு யோசவ் என்ற பெயரே இடப்பட்டது.

தமது மக்களின் ஆரவாரத்தை உணர்ந்த பரிசுத்த தந்தை தமது அறையின் யன்னலைத் திறந்து அவர்களுக்குத் தமது ஆசீர்வாதத்தை அருளியதுமல்லாமல், நடுநிசிவேளையாய் இருந்தபடியால் அவர்களோடு கூடத் திரிகாலைச் செபமும் ஓதினார். சதுக்கத்தில் கூடிநின்ற பெருந் திரளான மக்கள் கரகோசம் செய்தும், தங்கள் மோட்டோர் வாகனங்களின் ஊதிகளை அமுக்கிக் கூச்சலிட்டும் தங்கள் சந்தோஷத்தையும் நன்றியையும் தெரிவித்தனர்.

## சென்னை—மைலாப்பூர் உதவி ஆயரின் தங்க விழா

சென்னை— மைலாப்பூர் அதிமேற்றிராசனத்தின் உதவி ஆயராகிய மகா வந். எவ். ஏ. கார்வால்லோ ஆண்டகை அவர்கள் சென்ற மாதம் தமது குருத்துவ அபிஷேகத்தின் தங்க விழாவைக் கண்டுகளித்தார். அப்போது அதிமேற்றிராணி ஆண்டவரும், குருமாரும் திரளான கத்தோலிக்க மக்களும் தங்க விழா நாயகருக்குத் தங்கள் வாழ்த்துக்களைச் சமர்ப்பித்தனர். இன்னும் பல்லாண்டுகள் அவர் சருவேசுரனுக்குத் தொண்டாற்றி வருவாராக.

* * *

## 'உகாந்தா' தேசத்தின் புதிய பிரதம ஆயர்

மசாக்கா நகரின் மேற்றிராணியாராயிருந்த **அதிவந். கிவானுக்கா ஆண்டகை** அவர்கள் ருபாகா நகரின் அதிமேற்றிராணியாராக பதவி உயர்வு பெற்று உகாந்தா தேசம் முழுவதினும் பிரதம மேற்றிராணியாராக நியமனம் பெற்றுள்ளார். இவருக்கு வயது 61. இவர் ஆபிரிக்க நாடுகளின் சுவிசேஷக போதகஞ் செய்துவரும் 'வெள்ளங்கிக் குருக்கள்' சபையைச் சேர்ந்தவர். இவர் 1939-ம் ஆண்டு பரிசுத்த பாப்பரசர் 12-ம் பத்திநாதர் கையால் வேறு 11 சுவிசேஷ போதக மேற்றிராணிமார்களுடன் மேற்றிராணிப் பட்டாபிஷேகம் பெற்றவர்.

* * *

## திருக்குடும்பக் கன்னியர் சபை ஸ்தாபகரின் நூற்றாண்டு விழா

போர்டோ திருக்குடும்பக் கன்னியர் சபையின் ஸ்தாபகராகிய **வண. பீற்றர் பியான் வெனு நோஆய்** சுவாமியார் அவர்களது மறைவின் நூற்றாண்டு விழா கடந்தமாதம் போர்டோ நகரத்தில் கொண்டாடப்பட்டபோது, கருதினல்மார் சங்கத்தின் தலைவராகிய மேன்மைதங்கிய கருதினல் திஸ்செறாற் ஆண்டவர் அவர்கள் அங்கு சமுகமளித்தனர். இக்கருதினல் ஆண்டவர் அவர்களே திருக்குடும்பக் கன்னியர் சபை முழுவதற்கும் பாதுகாவலராய் இருக்கிறார். திருக்குடும்பக் கன்னியர் சபையில் தற்போது 4500 கன்னியர்களும், 280 மடங்களும் உலகின் வெவ்வேறு பாகங்களில் உண்டு.

* * *

## அயர்லாந்தில் அர்ச். பத்திரிசியாரின் ஆண்டு

சென்ற மாதம் 17-ந் திகதி ஆர்மாஹ் பட்டணத்தில் அர்ச். பத்திரிசியாரின் 15-வது நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. இக்கொண்டாட்டத்திற்குப் பாப்பரசரின் விசேஷ பிரதிநிதியாக வந்த லொஸ் ஆஞ்ஜலஸ் நகரின் அதிமேற்றிராணியாரான மேன்மை தங்கிய கருதினல் மக்கின்ரையர் ஆண்டவர் அவர்கள் பெரிய பாடற் பூசை நிறைவேற்றி, அர்ச். பத்திரிசியாரின் வருடத்தை ஆரம்பித்து வைத்தார். அயர்லாந்தின் பிரதம மேற்றிராணியாரான கருதினல் டோல்ரன், இங்கிலாந்தின் கருதினலாகிய கொட்விறி, பொஸ்ரன் நகரின் மேற்றிராணியாரான கருதினல் கஷ்ஷிங் ஆண்டவர்களும், இன்னும் பெருந்தொகையான அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் இக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர். பூசையின் எழுந்தேற்றத்தின்போது அர்ச். பத்திரிசியார் காலத்தில் [illegible] கோவில் மணி மீண்டும் அடிக்கப்பட்டது.

அடுத்துவரும் ஆனி மாதத்தில் அயர்லாந்தின் வேதபோதக குருக்களும் துறவிகளும் ஆற்றிவரும் பெரும் பணியைக் காட்டும் பொருட்காட்சியொன்று நடைபெறவிருக்கின்றது. இதைத் திறந்துவைப்பதற்கு வேதப் பரப்புதல் சங்கத் தலைவரான மேன்மை தங்கிய கருதினல் அகஜியானியான் ஆண்டவர் பாப்பரசரின் விசேஷ பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

## அமெ. ஜனாதிபதிக்கு கௌரவ பதக்கம்

அமெரிக்காவிலுள்ள நோத்திறடாம் (Notre Dame) றோமன் கத்தோலிக்க சர்வகலாசாலை 1883-ம் ஆண்டிலிருந்து புகழ்பெற்ற கத்தோலிக்க இல்லற வாசிகளுக்கு வருடாவருடம் வழங்கிவரும் லேற்றாறே (Lactare) என்ற கௌரவப் பதக்கம் இவ்வருடம் அமெரிக்காவின் முதல் கத்தோலிக்க ஜனாதிபதியாகிய திரு. ஜோண் கென்னடி அவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

* * *

## கருதினல் மிம்மி காலமானார்

கத்தோலிக்க நாடுகளிலுள்ள மேற்றிராசனங்களின் விவகாரங்களைக் கண்காணித்துவரும் பரிசுத்த சங்கத்தின் செயலாளராய்த் தொண்டாற்றிவந்த கருதினல் மார்செல்லோ மிம்மி ஆண்டவர் அவர்கள் தமது 78-வது வயதில் சென்ற மாதம் 6-ந் திகதி காலமானார். இவர் பாரி, கிறேமா, நேப்பிள்ஸ் முதலிய பட்டினங்களின் மேற்றிராணியாராகக் கடமையாற்றியவர். இம்மேற்றிராசனங்களில் தொண்டாற்றியபோது ஏழை எளியவர்கள் அநாதைகள் மட்டில் அவர் காண்பித்துவந்த அன்பும் கரிசனையும் எவராலும் நன்கு அறியப்பட்ட விடயம். கால்மேஸ் இன்றி மேற்றிராணியாரைச் சந்திக்கச் சென்ற ஏழைமக்கள் மேற்றிராணியாருடைய சிவப்புக் கால்மேசுகளை அணிந்துகொண்டு வெளியேறியதை அநேகர் பல தடவைகளிற் கண்டு ஆச்சரியமடைந்தனர். 2-ம் உலக யுத்தத்தின்பின், நேப்பிள்ஸ் பட்டினத்து மேற்றிராணியாராகக் கடமையாற்றிய பொழுது அநாத பிள்ளைகளுக்கென முதல்முதலாக "பிள்ளைகளின் கிராமம்" ஒன்றை நிறுவிய பெருமை அவருக்கே உரியது.

* * *

## மதுரை அதிமேற்றிராணியாரின் வெள்ளி விழா

மதுரை அதிமேற்றிராணியாராகிய மகாவந். ஜோண் பீற்றர் லெயோனார்டு ஆண்டகை அவர்கள் தமது மேற்றிராணித்துவ அபிஷேகத்தின் வெள்ளி விழாவைச் சென்ற மாதம் 15-ந் தேதி கண்டுகளித்தார். இவர் 1936-ம் ஆண்டு பங்குனி மாதம் 15-ந் தேதி திருச்சிராப்பள்ளியின் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்றார். 1938-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மேற்றிராசனம் பிரிக்கப்பட்டபொழுது, இவர் புதிதாக நிறுவப்பெற்ற மதுரை மேற்றிராசனத்தின் ஆயராக நியமகம் பெற்றார். 1953-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 19-ந் தேதி மதுரை அதிமேற்றிராசனம் ஆக உயர்த்தப்பட்டபொழுது, லெயோனார்டு ஆண்டகை அவர்களும் பதவி உயர்வு பெற்றார். இவருடைய நீண்டகால ஆட்சியின்கீழ் மதுரை அதிமேற்றிராசனம் எல்லாத் துறைகளிலும், சிறப்பாக கத்தோலிக்க சேவை இயக்கத்திலும் தீவிரமாக முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. இவ்வுத்தம ஆயரைத் தேவன் இன்னும் பல ஆண்டுகட்குப் பாதுகாத்தருளுவாராக.

# தமது திருவாக்கின்படியே ...

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

கள்" எனக்கேட்டார். தம்முடைய காயங்களின் தழும்புகள் ஒவ்வொன்றையும் அவர்களுக்குக் காண்பித்தார். அழிக்கப்பட்ட ஆலயம் மூன்றுநாள்களில்கட்டி முடிக்கப்பட்டிருப்பதை அவர்கள் நேரிற் கண்ணுற்றார்கள்.

யேசுநாதரின் திருக்காயங்கள் நமக்குத் தேவபிரமாணங்களை நினைவுறுத்தும் சின்னங்களாய் மிளிர்கின்றன. சிலுவையில்லையானால் திறக்கப்பட்ட கல்லறையைக்கண்டிருக்க முடியாது. முள்முடி இல்லையேல் மகிமைப்பிரதாபமான திருச்சரீரம் இருந்திருக்க இயலாது. தீமைக்கு எதிராக நிகழ்ந்த போராட்டத்தில் தான் மோட்சம் வெற்றியின் வெகுமதியாக மேற்கொள்ளப்பட்டது.

நாங்களும் இன்று போராட்டத்தின் சுழலிலேயே சிக்கிக்கிடக்கின்றோம். சிலுவையின் பாரத்தால் நாம் நசுக்கப்பட்டுச் சிறிதளவாவது சுமையைத் தாங்காவிட்டால் ஒருபோதும் மீளவே முடியாது. சிலுவையே உயிர்த்தெழுதலுக்கு நம்மை அழைத்துச்சென்று, பரலோககிரீடத்தை நமக்குச் சூட்டும்என்பதை நாம் மறக்கக்கூடாது.

"கிறிஸ்து மீண்டும் உயிர்க்கமாட்டார்" என்று முத்திரை வைத்துக்காக்கும் பொதுவுடைமைவாதிகள் இன்றும் இறுமாந்திருக்கின்றார்கள். மீண்டும் கல்லறையின் முத்திரை தகர்க்கப்படும். ஆண்டவர் அதனைத்தகர்த்தெறிவார். வேதகலாபனைக்காரர் அர்ச். சின்னப்பரைப்போல் மீண்டும் யேசுவின் சீடர்களாவார்கள் என்பது நிச்சயம். கிறிஸ்துவின் விரோதிகள் அவர்மீது வாழ்த்துக்கீதம் பாடும்காலம் வெகுவிரைவில் மலரும். அன்றையதினமே நமது உலகின் உயிர்த்தெழுதலின் நாளாகும்.

"உண்மை ஒருபோதும் அழியாது" என்ற வார்த்தைக்கு இலக்கியமாக இலங்கும் இப்பொன்னாளிலே, சத்தியமறைக்கு எதிராகக் கிளம்பும் சதிகாரர்களுக்கு முன் நேருக்குநேர் நின்று நாம் போராடும் வல்லபத்தை நித்திய தேவனிடம் இரந்து மன்றாடுவோம். உத்தானமானது நமது ஞானப்போராட்டத்தில் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் மனோவலியையும் வளர்க்கும் வச்சிரத்தம்பமாக இலங்குவதாக.

— M. V.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday April 1-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org